73

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

373
4.51.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - NOV 1951
MADRAS

கண்ணன் கழகம் உங்களுக்காக ஆரம்பித்திருக்கும் சங்கம். இந்தச் சங்கம் புது மாதிரியானது. இதற்குப் பல அருமையான திட்டங்கள் இருக்கின்றன. இதில் சேருபவர்களுக்குப் பல சௌகரியங்கள் உண்டு. நண்பர்கள் ஏராளமாக ஏற்படுவார்கள். விளையாட்டு, எலெக்ஷன், உல்லாச யாத்திரை, பரிசுகள், அறிவு வளர்ச்சி சாதனங்கள் முதலிய எத்தனையோ நன்மைகளும் வசதிகளும் கிடைக்கும். இப்போது 6500 பேருக்குமேல் இதில் நிரந்தர அங்கத்தினராக இருக்கிறார்கள். இமயம் முதல் குமரிவரையிலும் இன்னும் இலங்கை, மலேயா, முதலிய வெளிநாடுகளிலிருந்துங்கூட பல அங்கத்தினர்கள் இதில் சேர்ந்திருக்கிறார்கள்.

உங்களுக்கு இதில் சேர வேண்டுமென்று ஆசையாக இருக்கும். இதுவரையில் நீங்கள் சேராமல் இருந்தால் இப்பொழுது கூடச் சேரலாம். சேருவது மிகவும் சுலபம். இந்த இதழிலேயே ஒரு கூபன் இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்து கத்தரித்து அனுப்பவேண்டும். அவ்வளவு தான்.

இதே போன்ற கூபன்கள் ஒவ்வொரு மாதமும் கண்ணனில் வெளிவரும். தொடர்ந்து மூன்று மாதக் கூபன்களை அனுப்புகிற வர்கள் கண்ணன் கழக நிரந் அங்கத்தினர்கள். அவர்க பெயரைக் கண்ணனில் வெள யிடுவோம். மூன்று மாதக் கூப களைப் பூர்த்திசெய்து மொத் மாக அனுப்பினால் போது அவர்களுக்கு இனாமாக எனாமல் பாட்ஜ் ஒன்று கழகத்திலிருந்து கிடைக்கும். இதற்குச் சந்தா தொகை எதுவும் கிடையா கூபன்கள்தான் அனுப்பவே டும். ஒரே குடும்பத்தில் உ குழந்தைகள் ஒரு கூப பூர்த்தி செய்து மற்றவர் பெயர்களையும் அதில் சேர் எழுதி அனுப்பலாம். ஆ தலைக்கு மூன்று கூபன் வீ தான் அனுப்பவேண்டும். வப்போது கண்ணனில் பே கள் வெளியாகின்றன. இ போட்டிகளில் கண்ணன் அங்கத்தினர்கள் மட் கலந்துகொள்ளலாம். ம கலந்துகொள்வதற்கில்லை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - NOV 951

கண்ணன்

தபால் பெட்டி : 604,
மயிலாப்பூர்,
சென்னை, 4.

பொருளடக்கம்

மலர்: 2 இதழ்: 6

குழந்தைகளே! .. .. .. பக்கம் 2
சின்னராஜா - 'வாசகன்' 3
அணில் - அழ. வள்ளியப்பா 8
கிரிக்கெட் கற்றுக்கொள் - ராம்சிங் .. 9
ஜக்கு துப்பறிகிருன் - 'ஆர்வி' .. 13
'கோ' விளையாட்டு - டி. கே. ராமமூர்த்தி .. 19
வெண்மதி - 'சசிதேவன்' 20
உல்லாசப் பிரயாணம் - வி. எஸ். இந்திராணி 21
குட்டிக் கதைகள் - ராமசர்மா 26
முயல்கள் மகாநாடு - 'சோமசன்மா' .. 29
மீனுவின் மனம் - சரோஜா ராமமூர்த்தி .. 33
நாகசுந்தரி - எஸ். வி. ரமணி 39
எண்ணிலே படங்கள் - 'மூட்லட' 46
கண்ணன் கழக அங்கத்தினர்கள் 47
பொம்மைக் கல்யாணம் - என். சோமசுந்தரம் 49
ஸீஸன் துணுக்குகள் - டி. வி. ரங்கசாமி .. 5
கண்ணன் தபால் 54
கேட்டீர்களா! 56

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே

வருஷ சந்தா
ரூ. 3/-

கலைமகள்
மஞ்சரி
கண்ணன்

குடும்பச் சந்தா
ரூ. 12/-

குழந்தைகளே!

கொஞ்சங்கூட இப்படி நடக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை. இவ்வளவு நாள் வரையில் கடிதமும் கார்டு மாக எழுதி வந்த அங்கத்தினர்கள் இப்பொழுது விடுமுறையானதால் நேரிடவே வர ஆரம்பித்துவிட்டார்கள். "இதோ காரம் போர்டு பரிசுக் கதை! இதோ எங்கள் 'உல்லாசப் பிரயாணம்', இது 'என் விடுமுறை' என்ற கட்டுரை" என்று கையோடு கொண்டு வந்துள்ள கட்டுரைகளை நீட்டத் தொடங்கிவிட்டார்கள். நானும் சளைக்காமல் வாங்கி, சலிக்காமல் படித்துக் கொண்டிருக்கிறேன்.

ஒரு நாள் தடதட என்று படை திரண்டு வருவதுபோல ஏழெட்டு அங்கத்தினர்கள் வந்தார்கள்.

அவர்கள் ஒரே ஊரைச் சேர்ந்தவர்களல்ல என்று பிறகுதான் தெரிந்தது. மதுரை, பங்களூர், திருச்சி, தஞ்சாவூர் முதலிய இடங்களி விருந்து வந்திருந்தார்கள்.

முதல் நாள் மரீனா கடற்கரையில் உள்ள 'ஸ்விம்மிங் பூலில்' பேசிக்கொண் டிருக்கிறார்கள். அடுத்தபடியாகக் கால் பந்து விளையாட்டுக்குப் பதிலாக 'ஸ்விம்மிங்' (நீச்சல்) கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று சொல்ல வந்திருக்கிறார்கள்.

"கேள்வியும் பதிலும் என்ற பகுதியை ஏன் கண்ணனில் ஆரம்பிக்கவில்லை?" என்றார்கள்.

"எல்லாரும் ஒரே மாதிரி செய்வானேன்? அதற்குப் பதில் ஓர் அருமையான பகுதி ஆரம்பிக்கப் போகிறோம்" என்றேன்.

'மதுரையில் எப்பொழுது கூட்டம் நடக்கப் போகிறது?'

"பள்ளிக்கூடம் திறந்ததும்—"

"சென்னையில்?"

"ஜூலையில் ஒரு சாதாரணக் கூட்டம் நடைபெறும்" என்றேன் நான்.

அவர்கள் என்னவெல்லாமோ கேட்டுவிட்டுப் போனார்கள். அவர்களுக்குச் சொல்ல வேண்டிய பதிலையெல்லாம் உங்களுக்கும் சொல்லித்தானே ஆகவேண்டும்?

ஜக்குவை நாடகமாகத் தயாரித்துக் கண்ணன் வருஷ விழாவில் நடிக்கச்செய்ய எண்ணியிருக்கிறோம். அதில் நடிக்கக்கூடிய நல்ல முகவெட்டுள்ள பையன்கள் (சென்னையில் உள்ளவர்கள் மட்டும்) தங்கள் போட்டோவை அனுப்பலாம். போட்டோ அனுப்புகிறவர்கள் நந்து, சோனி, உல்ப் இந்தப் பாத்திரங்களுக்கு ஏற்றவர்களாகவும் இருக்கலாம்.

அடுத்த அடுத்த மாதம் ஜக்கு முடிவுறும் வேறு ஒரு புது அம்சம் படங்களுடன் ஆரம்பமாகப் போகிறது. கால் பந்து ஆட்டத்துக்கு முன்பு 'ஸ்விம்மிங்' ஆரம்பமாகப் போகிறது இன்னும் பல அம்சங்கள் கண்ணனில் இடம் பெறும்.

உங்கள் கண்ணன் கழகத்தில் இப்போது ஆறாயிரத்து ஐந்நூறு அங்கத்தினர்களுக்கு மேல் சேர்ந்துவிட்டார்கள். தென்னிந்தியாவிலேயே இப்பொழுது பெரிய கழகம் இதுதான். பல இடங்களில் கிளைக் கழகங்கள் ஏற்பட்டு வருகின்றன இதுவரையில் சேராதவர்கள் எல்லாம் கண்ணன் கழகத்தில் சேர்ந்து இதைப் பயன் நிரம்பியதாகச் செய்யவேண்டும்.

—ஆசிரியர்.

சின்னராஜா

'வாசகன்'

6. கலக்கம்

வெளியில் அகழிக்கு அப்பால் பகைவர்களுடைய ஆரவாரம் பலமாக இருந்தது. கோட்டையைக் காக்கும் பொறுப்பை வகித்த மருதப்பருக்கு அதிகக் கவலை உண்டாயிற்று. கோட்டைக்குள் இருந்த வீரர்கள் மிகவும் சிலரே. வெளியிலே கோட்டூர் அரசனுடைய வீரர்கள் நூற்றுக் கணக்காக இருந்தார்கள்.

மருதப்பர் தம்மால் இயன்ற அளவு வீரர்களை, எங்கெங்கே இருக்கும்படி செய்யவேண்டுமோ அங்கங்கே இருக்கச் செய்தார். கோட்டைக்குள் இருந்த ஆயுதங்கள் அத்தனையையும் சேகரித்துக் கொண்டார். பெரிய பெரிய பாறாங்கற்களைக் கோட்டை மதில்சுவரின் மேலே ஏற்றினார். அகழியைத் தாண்டிப் பகைவர்கள் வந்தால் அவர்கள்மேல் அவற்றைத் தள்ளலாம் என்பது அவருடைய எண்ணம். கோட்டை வாசலிலிருந்து போவதற்கு அகழியின் மேல் இருந்த தூக்கும் பாலத்தை இப்போது தூக்கி வைக்கும்படி சொன்னார். பகைவர்கள் அகழியைத் தாண்டி வந்துவிட்டாலும் உள்ளே நுழைய முடியாது. கோட்டை வாசலில் பிரம்மாண்டமான கதவு இருந்தது. மதிலைச் சுற்றி ஒட்டினாற்போல் அகழி இருந்தது. ஆனால் ஓரிடத்தில் மதில்சுவரின்மேல் பகைவர்கள் ஏறிவிட்டால் பிறகு கீழே இறங்கி விடலாம்.

கோட்டூர்க்காரர்கள் சும்மா இருக்கவில்லை. அகழியைத் தாண்டுவது அவர்களுக்குப் பெரிய காரியமாகத் தோன்றவில்லை. பெரிய பெரிய மரங்களைக் கொண்டுவந்து அகழியிலே போட்டார்கள். அவை அகழியில் மிதந்தன. வரிசை வரிசையாக அவற்றை நிரப்பிப் பாலத்தைப்போலக் கட்டிவிடலாம். இதற்காக அருகிலிருந்து காட்டு மரங்களையும் செடிகொடிகளையும் அவர்கள் வெட்டிக் கொண்டுவந்து குவித்துவிட்டார்கள்.

மதில்மேல் மறைந்திருந்த வீரர்கள் பகைவர்கள்மேல் அம்பு எய்தார்கள். அகழிக்கு வந்து மரங்களைப் பாலமாக அமைப்பதற்கு இது தடங்கலாக இருந்தது. அவர்களும் மதிலின்மேல் ஏதாவது தலை தெரிந்தால் உடனே அம்பு எய்தார்கள். ஆனால் மதிலில் மறைந்து அம்பு எய்வதற்கு ஏற்ற இடங்கள் பல இருந்தன. அதனால் அவர்கள் எய்யும் அம்புகளால் அதிகப் பயன் உண்டாகவில்லை. வெயில் ஏறிக் கொண்டேயிருந்தது. பகைவர்கள் அகழியைக் கடக்க முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். இரண்டு மூன்று இடங்களில் இத்தகைய மரப் பாலத்தை அமைக்க அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். எல்லா இடங்களிலும் அவர்களின்மேல் அம்பு

எய்வதென்பது சாத்தியமாக இல்லை. கோட்டை வாசலுக்கு அருகில் போடும் பாலத்தைத் தடுப்பதில்தான் அதிகக் கவனத்தைச் செலுத்தினார்கள்.

இப்போது நடுப்பகல் தாண்டி விட்டது. இன்னும் சிறிது நேரத்தில் பகைவருடைய ஆட்கள் கோட்டையின் வாசலுக்கு வந்து விடுவார்கள் என்று தோற்றியது. பாலத்தை அமைத்தவர்களெல்லாம் கேடயங்களைக் குடைபோலத் தலைக்கு மேல் பிடித்திருந்தார்கள். எப்படியோ ஒருவிதமாகப் பாலத்தைக் கோட்டை வாசலுக்கு முன்பு பகைவர்கள் அமைத்துவிட்டார்கள். இந்தக் கரையில் தூண்களை நிறுத்திக் கனமான கயிற்றைக் கொண்டு மரங்களைக் கட்டி, அந்தக் கயிற்றைத் தூணிலே கட்டிவிட்டார்கள். இனிப் பத்துப் பத்துப் பேராக அகழியைக் கடந்துவிடலாம். கோட்டை வாசலுக்கு முன்பு கொஞ்சக்தான் இடம் இருந்தது. அங்கே நின்று கோட்டை வாசல் கதவைப் பிளக்க முயன்றார்கள். மேலே இருந்த ஆலூர்ப் படைவீரர்கள் பெரிய பாருங் கற்களை அவர்கள்மீது தள்ளினார்கள். பாலங் கட்டி மதில் சுவரை அடைந்தும் பயனில்லாமல் போயிற்று. இதற்கு என்ன வழி என்று பகைவர்கள் யோசித்தார்கள். அவர்களுக்கு ஒரு தந்திரம் தோன்றியது. கம்பும் கழியும் கொண்டு அகலமான படல் ஒன்றை அமைத்து, அதன்மேல் சாக்கைத் தைத்துப் பெரிய கவசத்தைப்போல உபயோகிக்கலாம் என்ற யோசனை உண்டாயிற்று. அப்படியே அக்கரையில் இந்தப் படலைத் தயார் செய்தார்கள்.

மதில்சுவரின்மேல் மருதப்பர் ஏறிப் பகைவர்களுடைய நிலை எப்படி இருக்கிறது என்று பார்த்தார். பகைவர்கள் கட்டுகின்ற படல் அவர் கண்ணில் பட்டது. அதோடு வேறோர் இடத்தில் அகழிக்கும் மதிலுக்கும் நடுவில் மிகக் குறுகிய இடம் இருந்தது. அங்கே சில பேர் வந்து ஒரு பெரிய ஏணியை மதில் மேலே சார்த்தி ஏறத் தொடங்கினார்கள். மதில் கதவைப் பகைவர்கள் பிளப்பதற்கு முன்பு, ஏணி மேல் ஏறுகிறவர்கள் விரைவில் மதில்சுவரில் ஏறிவிடுவார்கள் என்று தோன்றியது. அப்படி அவர்கள் ஏறி விட்டால் அவர்களைத் தொடர்ந்து மற்றவர்களும் ஏறிவிடுவார்கள். நூறு பேர்கள் ஏறி இந்தப் பக்கம் இறங்கி வந்துவிட்டால் பிறகு ஆபத்துப் பெரிதாகிவிடும். எல்லோரும் அரண்மனைக்குள்ளே புகுந்து அரண்மனைக் கதவைச் சாத்திக்கொள்ள வேண்டியதுதான்.

ஏணியின்மேல் ஏறுகிறவர்களைத் தடுக்கலாமென்றாலோ அவர்கள் பெரிய படல் ஒன்றைத் தலைக்கு மேல் பிடித்துக்கொண் டிருந்தார்கள். அவர்கள் ஏணி வைத்திருந்த இடத்துக்கு மேலே மதிலில் மறைவான இடம் இல்லை. மதில்சுவரில் நின்றுகொண்டு, ஏணியின்மேல் ஏறுகிறவர்களைத் தடுக்க வேண்டும். அப்படித் தடுப்பதற்காக அங்கே நின்றால் பகைவர்களின் கண்ணுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் சும்மா இருப்பார்களா? அம்பு எய்து, மதிலின் மேல் நிற்கிறவர்களைக் கொன்றுவிடுவார்கள். இரண்டு மூன்று பேர்கள் அப்படி அம்புக் காயத்தோடு விழுந்துவிட்டார்கள்.

மருதப்பருக்கு வரவரக் கலக்கம் அதிகமாயிற்று. அன்று முழுவதும்

மதிலின்மேல் ஏற முடியாமல் போனாலும், மறுநாள் பொழுது விடிந்தால் பகைவர்கள் நிச்சயமாக மதிலின்மேல் ஏறி விடுவார்கள். ஊருக்குப் போயிருக்கும் மார்த்தாண்ட மன்னர் வந்தால் ஒழிய இந்த அபாயத்துக்குப் பரிகாரம் இல்லை என்ற எண்ணந்தான் அவருக்கு உண்டாயிற்று.

ஏணியை வைத்து ஏற்பாடு செய்வதற்கு நெடுநேரம் ஆகிவிட்டது. மேலிருந்து உருட்டிவிட்ட கற்களுக்குப் பலர் பலியாயினர். ஆனாலும் பகைவர்கள் விடாமுயற்சியுடன் போராடி வந்தனர். இந்த நிலையில் சூரியன் அஸ்தமித்தான். பகைவர்கள் தங்கள் கூடாரங்களுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

மருதப்பர் அரண்மனைக்குச் சென்றார். முக்கியமானவர்களையெல்லாம் வருவித்து ஆலோசனை செய்தார். அங்கே சின்ன ராஜாவும் இருந்தான். அவனுடைய தாயும் இருந்தாள். அதிகமானும் கூட்டத்துக்கு வந்திருந்தான். மருதப்பர் பகைவர்களுடைய முயற்சியையும் கோட்டைக்கு நேர்ந்துள்ள அபாயத்தையும் எடுத்துச் சொன்னார். கேட்டவர்கள் யாவரும் மிக்க வாட்டத்துடன் உட்கார்ந்திருந்தார்கள்.

"இன்று நல்ல வேளையாக அவர்கள் மதிலில் ஏறவில்லை. ஆனால் நாளைக்கு விடிந்தால் ஏறிவிடுவார்கள். ஏதோ கொஞ்சநேரம் ஏறாமல் அவர்களைத் தடுக்கலாம். துரதிருஷ்டவசமாக, ஏணி சார்த்தியிருக்கிற இடத்தில் சுவரில் மறைந்து நிற்க வழியில்லை. அதனால்தான் இத்தனை சங்கடமும். பழைய காலத்தில் அந்த இடத்தின் வழியே யாரோ இறங்கி ஏறினார்களாம். அதற்காகவே மதிலின் கீழ்க் கொஞ்



சம் இடங்கூட இருக்கிறது. அந்த இடத்தை முன்பே வெட்டிவிட்டிருக்கவேண்டும். அது இப்போது பகைவர்களுக்கு உதவியாக இருக்கிறது" என்று மருதப்பர் சொன்னார்.

"ராத்திரியில் நாம் அங்கே இறங்கி அந்த இடத்தை வெட்டிவிட்டால் என்ன?" என்று ஒருவர் கேட்டார்.

"அவ்வளவு சுலபமாக ஆவதல்ல அது. அதோடு, வெணி வைத்திருக்கும் இடத்துக்கு எதிரே கரையில் விளக்கு வைத்துக்கொண்டு பகைவர் காத்திருக்கிறார்கள். அவர்கள் கண்ணுக்குப் படாமல் நாம் எப்படி அங்கே போவது?" என்றார் மருதப்பர்.

"என்னதான் செய்வது?" என்று கலவரத்தோடு கேட்டாள் ராணி.

"நாளைக்குக் காலையில் சில மணி நேரம் நம்மால் ஆன முயற்சியைச் செய்யலாம். மதிலின்மேல் பகைவர்கள் ஏறிவிடுவார்கள் என்று தெரிந்தால், நாம் யாவரும் அரண்மனைக்குள் புகுந்து கொள்ள வேண்டியதுதான். மேல் மாடத்தில் இருந்தபடியே அம்பையும் கல்லையும் கட்டியையும் வீசிப் பகைவர்களோடு போராட வேண்டியிருக்கும்" என்று மருதப்பர் சொன்னார்.

"அப்படி எவ்வளவு காலம் இருக்க முடியும்? மதிலை அவர்கள் தாண்டி வந்துவிட்டால் விரிவான இடம் இங்கே இருக்கிறது. கோட்டை வாசலைப் பகைவர்கள் திறந்துவிட்டுப் படை முழுவதையும் அரண்மனையைச் சுற்றி நிறுத்தி விடுவார்கள். அரண்மனைக் கதவை உடைக்க அவர்கள் ஏற்பாடு செய்வார்களே! என்னதான் கதவு பலமுள்ளதாக இருந்தாலும் அடிமேல் அடி அடித்தால் அது எவ்வளவு நேரம் தாங்கப்போகிறது?" என்று கூட்டத்தில் இருந்த வாத்தியார் விளக்கினார். சின்னராஜா அவர் பேச்சைக் கவனித்தான். அவர் சொல்வது ஒவ்வொன்றும் ஆணித்தரமாக இருப்பது புலப்பட்டது. மருதப்பர் என்ன பதில் சொல்லப் போகிறார் என்று ஆவலோடு கவனித்தான்.

“வாத்தியாரவர்கள் சொல்வது சரிதான். நான் சொல்லும் இந்த ஏற்பாடு பகைவரை வெல்வதற்கு ஏற்றவழி அல்ல. அவர்கள் எதிர்ப்பை இப்போதைக்குச் சமாளிப்பதற்கு முடியும்; அவ்வளவுதான். மகாராஜா அவர்கள் அதற்குள் திரும்பி வந்தால்தான் நமக்கு நல்லது. இல்லையானால்”—— மருதப்பர் மேலே பேசாமல் நிறுத்தினார்.

“மகாராஜாவுக்கு இங்குள்ள செய்தியைச் சொல்லியனுப்பினால் என்ன?” என்று ராணி கேட்டாள்.

“மகாராஜாவுக்குச் சொல்லியனுப்புவதானால் முதலிலேயே செய்திருப்பேனே. யாரை அனுப்புவது? எப்படி அனுப்புவது? இங்கே உள்ள ஒவ்வொரு வீரனுக்கும் வேலை இருக்கிறது. அது தவிர, பகைவரைக் கடந்து எப்படிப் போகிறது?” என்று மருதப்பர் கவலையோடு பேசினார்.

சின்னராஜா இந்தப் பேச்சையெல்லாம் கவனித்துக்கொண்டேயிருந்தான். இவ்வளவு சங்கடங்களும் தன்னாலே ஏற்பட்டவை என்று அவன் நினைத்தான். காட்டிலே கண்டெடுத்த ஓலை நறுக்கை அவன் படித்தறிய முடிந்திருந்தால் எவ்வளவு முன் ஜாக்கிரதையோடு வேலை செய்திருக்கலாம்! அல்லது வந்தவுடனே அந்த ஓலையை வாத்தியாரிடம் கொடுத்திருந்தாலும் போதுமே! இவ்வளவு தூரம் காரியம் கெட்டுப் போனபிறகு என்ன செய்வது? மார்த்தாண்ட மன்னர் உதவிக்கு வராவிட்டால் பகைவர்கள் கோட்டையைக் கைப்பற்றிக் கொள்வது நிச்சயம். பகைவன் கையில் கோட்டை போய்விட்டால்,

சின்னராஜா என்ன செய்வான்! அம்மா என்ன ஆவாள்?— இதை நினைக்கும்போதே அவன் உடம்பு நடுங்கியது. தான் செய்த பிழைக்குத் தான்தான் பரிகாரம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது. இனிமேல் அவன் படித்துக் கெட்டிக்காரனாகப் போவது ஒரு பரிகாரம். ஆனால் அது இப்போது உதவாதே! உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும் வீரர்களுக்கும் மருதப்பருக்கும் ஏதாவது உதவி செய்தால்தான் உடனடியாகப் பயன்படும். அவனும் வில்லும் அம்பும் எடுத்துக்கொண்டு படை வீரர்களோடு சேர்ந்து மதிலின்மேல் நிற்கலாம் என்றால், அவனுடைய அம்மா தடுக்கிறாள். மருதப்பரோ, "உன் கைக்கு வலிவு போதாது; முயலை அடிக்க உன் அம்பு உதவுமே ஒழியச் சண்டைக்குப் பயன்படாது" என்று சொல்கிறார். இந்த நிலையில் அவனால் என்ன செய்ய முடியும்?

ஏதாவது ஒரு காரியத்தைத் தைரியத்துடன் செய்யத்தான் வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். அவனுடைய தகப்பனாருக்குச் சமாசாரத்தைச் சொல்லியனுப்ப ஆள் இல்லையென்று மருதப்பர் சொன்னாரல்லவா? ஏன் அந்தக் காரியத்தை அவன் செய்யக் கூடாது? ஒருவருக்கும் தெரியாமல் தகப்பனாரிடம் போய்ச் சமாசாரத்தைச் சொல்லி அழைத்து வந்துவிட்டால், இப்போதிருக்கும் அபாயம் நீங்கும். அது ஒன்றுதான் வழி.

சின்னராஜா ஒரு தீர்மானத்துக்கு வந்தான். (தொடரும்)

அணிலே, அணிலே!

அழ. வள்ளியப்பா



அணிலே, அணிலே, ஓடிவா.
அழகு அணிலே, ஓடிவா!
கொய்யா மரம் ஏறிவா.
குண்டுப் பழம் கொண்டுவா.
பாதிப் பழம் உன்னிடம்;
பாதிப் பழம் என்னிடம்
கொறித்துக் கொறித்து இருவரும்,
கூடிக் கூடித் தின்னலாம்.

கிரிக்கெட் கற்றுக் கொள்

ராம்சிங்

போட்டோ:
எம். டி. வின்ஸென்ட்

பாக் லெக் கிளான்ஸ்
(Back Leg Glance)



1. பொதுவான ஆரம்ப நிலை.



2. ஆட்டக்காரர் பந்தின் மேலேயே குறியாக நிற்கிறார்.

3 பந்துக்கு நேராகப் பின் காலை நகர்த்திக் கொண்டு மட்டையையும் உயரத் தூக்கியிருக்கிறார்.



4. மட்டையைக் கீழ் நோக்கித் தணிக்கும் போது முன் கால் கூடச் சிறிது பின்னால் நகர்ந்திருக்கிறது.



5 மட்டையைச் செங்குத்தாகச் சாய்க்கும்போது முழங்கை நன்ருக உயர்ந்து மடங்கியிருப்பதைக் கவனி[illegible]ங்கள்.



6. பந்து காலைச் சுற்றிக்கொண்டு வரும்படியாக மெதுவாகக் கை மணிக்கட்டுப் பிடியைத் திருப்பியிருக்கிருர். கால்-பாட் இரண்டும் சேர்ந்திருக்கின்றன.



7. உடம்பு கூடச் சதுரமாய்ப் பந்து அடிபட்ட திசையில் திரும்பி யிருக்கிறது அப்பொழுது தான் தாராளமாய் அசைய முடியும்.

8. பந்தை அடித்தாகி விட்டது. அடித்த திசையில் அவர் மேலும் உடம்பைத் திருப்பியிருக்கிருர்.

ஜக்கு துப்பறிகிறான்

'ஆர்வி'

இந்தப் பக்கம் போனால் போலீஸ். அந்தப் பக்கம் போனால் போலீஸ். என்ன செய்வார், ரெட்டியார்? ஆபத்துக் காலத்தில் எப்பேர்ப்பட்ட கோழைக்கும் தைரியமும் துணிவும் ஏற்படும் அல்லவா? அதன்படி அவர் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து முன்பு ஜக்கு இறங்கி வந்தானே ஒரு படிக்கட்டு, அதன் வழியாக மேலே போக ஆரம்பித்தார். அந்தப் படிக்கட்டு மாறனேரி ஜமீன்தார் பங்களாவின் மேல்மாடிக்குப் போகிறது என்பது நமக்குத் தெரியும். அந்த வழியின் மேல் மூடி எப்போதும் தரையோடு தரையாக இருக்கும். ஆனால் ரெட்டியார் பாதிதூரம் ஏறியதுமே அதுவும் வீண் முயற்சி என்று திகைத்து நின்றுவிட்டார். கையில் ஏழுகுழல் துப்பாக்கியுடன் அந்தப் படிக்கட்டுகள் வழியாகச் சாக்ஷாத் அருணாசலம் இறங்கி வந்துகொண்டிருந்தார்.

ரெட்டியார் முகம் பயங்கரமாக, பேய் அடித்ததுபோல ஆகிவிட்டது. அவருடைய மீசைகூடப் பயத்தினால் படபடவென்று துடித்தது.

அருணாசலம் சிரித்துக்கொண்டே, "என்ன ரெட்டியார்வாள்! உங்களுக்கு ரொம்பச் சிரமம் கொடுத்துவிட்டேன் போலிருக்கிறது! ஆனால் கையைக் காலை அசக்கினீர்களோ, அப்புறம் இந்தத் துப்பாக்கிக்குப் படபடவென்று கோபம் வந்துவிடும். வெகு நாளாக நான் ஒரு வேலையும் கொடுக்கவில்லையே என்று இதற்குக் கோபம்!" என்று துப்பாக்கியைக் காட்டிச் சொன்னார். ரெட்டியார் ஒன்றும் பேசவில்லை.

அருணாசலம் மறுபடியும், "ஹலோ, ஜக்கு ஸார்! ரெட்டியாருடைய டிராயரிலே இந்தத் துப்பாக்கிக்குத் தம்பித் துப்பாக்கியார் ஒருவர் இருக்கிறார். அவரை வெளியில் இப்படி எடுத்துக்கொடுத்தால் தேவலை!" என்றார்.

ரெட்டியார் டிராயரை இழுக்க முடியாதபடி மேஜையில் சாய்ந்துகொள்ளப்போனார்.

"வீணாகச் சிரமப்படாதீர்கள் ரெட்டியார்வாள்!" என்று குனிந்தான் ஜக்கு. அவரை மெதுவாகத் தள்ளியபடி அந்த டிராயரைத் திறந்தான். உள்ளே இருந்த பிஸ்டலை எடுக்கும்போது அவன் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. கண்ணைப் பறிப்பதுபோன்ற பிரகாசத்துடன் புத்தம் புதுச் சில்லறைகள் டிராயர் முழுதும் பரவிக் கிடந்தன. ஒரு மூலையில் கத்தை கத்தையாக நூறு ரூபாய, பத்துரூபாய் நோட்டுகள் கட்டினபடி அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

அருணாசலம் அவனைப் பார்த்து, "ஏதாவது நீலப் பேப்பர் இருக்கிறதா பார், ஜக்கு!" என்றார்.

ஜக்கு பிஸ்டலை உல்பிடம் கொடுத்து விட்டு, டிரைவரைக் குடைந்தான். மேலேயே அருணாசலம் குறிப்பிட்டபடி நேர் நேராகவும் வளைத்தும் சுழித்தும் வெள்ளைக் கோடுகளால் எழுதப்பட்டிருந்த ஒரு நீலக் காகிதம் இருந்தது.

"இதோ, இதுதானே?" என்று அதை வெளியில் எடுத்துக் காட்டினன் ஜக்கு.

ரெட்டியார் ஆவேசம் வந்தது மாதிரி, "என் உயிர் போனாலும் சரிதான். அதைமட்டும் எடுக்காதே" என்று கூவிக்கொண்டே ஜக்குவின் மீது பாய்ந்தார்.

ஆனல் நல்ல வேளை! ஜக்கு குனிந்து ஒரே தாவாகத் தாவி, அவர் பிடியில் அகப்படாமல் தப்பித்துக்கொண்டான். அந்தச் சமயத்தில் பளபளவென்று மின்னலைப் போல் மின்னிய ஊசிபோன்ற ஒரு வஸ்து ரெட்டியாரின் சட்டைப் பையிலிருந்து கீழே விழுந்ததைக் கண்டான். குனிந்து அதையும் எடுத்துக்கொண்டான்.

"சபாஷ், ஜக்கு!" என்று உற்சாகத்துடன் கூவினர் அருணாசலம். ரெட்டியார் இப்பொழுதும் கலங்கவில்லை.

"இதெல்லாம் என்ன? நான் என்ன திருடனா? கொலைகாரனா? என்னுடைய அறைக்குள் உங்களை யார் நுழையச் சொன்னது? போலீஸ்காரர்களுக்கு இந்த வீட்டில் என்ன வேலை? இதற்கெல்லாம் நீங்கள் பின்னல் ரொம்ப வருத்தப்படவேண்டியிருக்கும்!" என்று பேசினர்.

"ரெட்டியார்வாள்! கொஞ்சம் சாந்தத்துடன் இருக்கவேண்டும். உங்களைப் போய் யாராவது அல்ப சொல்பமான திருடன் என்பார்களா? உங்களுடைய அறையில் உங்கள் உத்தரவு இல்லாமல் நுழைந்ததற்கு என்னையும் இந்தப் போலீஸ்காரர்களையும் மன்னிக்கவேண்டும். ஆனல் ஜக்குவையும் உல்பையும் நீங்களாகத்தானே அழைத்து வந்தீர்கள்? அவர்களிடமும் நீங்கள் கோபித்துக்கொள்ளலாமா?" என்றார் பரிகாசக் குரலில்.

"அந்தப் பயல்களை...... அந்தப் பயல்களை....அவர்களால்தானே.... இவ்வளவும் வந்தது?....." என்று உறுமிக்கொண்டே ரெட்டியார் கையைத் தட்டினர்.

அருணாசலம் கலகலவென்று சிரித்துக்கொண்டே, "அக்கட எவுரும் லேதண்டீ!" என்றார் தெலுங்கில்.

"எக்கட, எங்கே? ஏமி, என்ன?" என்று உளறினர் ரெட்டியார்.

"சரி, அப்பா ஜவான்களா! எங்கள் வேலை முடிந்துவிட்டது. இனிமேல் நீங்கள் உள்ளே வந்து உங்கள் வேலையைக் கவனிக்கலாம். ரெட்டியார் பெரிய ஜமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரை மரியாதையாகவே நடத்துங்கள்! மரியாதையாகவே அவரைத் தங்கக் கில்ட் போட்ட சங்கிலியால் கட்டுங்கள். இரும்புக் காப்பெல்லாம் போட்டு அவரைச் சாதாரணத் திருடன் போல அவமதிக்காதீர்கள். நாங்கள் போகிறோம். எங்களுக்கு வேறு ஒரு முக்கியமான வேலை இருக்கிறது! நீங்கள் வாசலில் இருக்கும் மோட்டாரில் இருந்தால் நாங்களும் வந்துவிடுவோம். ரெட்டியாருக்கு ரொம்பச் சிரமமாய் இருந்தால் முன்னல் போய்விடுங்கள்!" என்று சொன்னர்.

பிறகு ஜக்குவையும் உல்பையும்



பார்த்து, "வாருங்கள் போகலாம்!" என்று அந்த இடத்தை [illegible]ட்டுப் புறப்பட்டார்.

இப்போது வேறு வாசல் வழியாக வந்தார்கள். அங்கே ரெட்டியாருடைய கார் நின்றுகொண்டிருந்தது. ரெட்டியாருடைய டிரைவர் உட்கார்ந்திருந்தான். "அடேயப்பா, பங்களாவைச் சுற்றிக்கொண்டு போ!" என்று அவனிடம் அருணாசலம் ஏறி உட்கார்ந்துகொண்டதும் சொன்னார்.

"ஜக்கு! அந்தச் சுவிச்சினுடைய கதவு எங்கே திறக்குமோ, அந்த இடத்தைக் கொஞ்சம் காட்டு!" என்றார் அருணாசலம்.

பங்களாவின் திருப்பத்துக்குக் கார் வந்தபோது ஜக்கு எழுந்து, "அதோ, அந்த இடந்தான்!" [illegible]ாட்டினான்.

அந்த இடம் ஓர் இருட்டுக் கொட்டடி மாதிரி இருந்தது. எதிரே ஒரு கட்டைச் சுவர் மறைத்துக்கொண்டிருந்தது. சாதாரணமாகப் பார்ப்பவர்களுக்கு அது வீட்டின் பின்புறத்தைச் சேர்ந்த ஒதுப்புற வாசல் போலிருக்கும். அந்த இடத்தை யாருமே கவனித்திருக்கமாட்டார்கள். அதிகம் என்ன? அருணாசலமே இதுவரை அதைக் கவனித்ததில்லை. கவனித்திருந்தாலும் அதைப் பொருட்படுத்தியதில்லை.

ஜக்கு அந்த இடத்தைக் காட்டியதும் எல்லாரும் அந்தத் திசையில் பார்த்தார்கள். அப்போது ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஓர் ஆள் டிப்டாப்பாக உடையணிந்துகொண்டு அந்த வாசலில் நுழைந்துகொண்டிருந்தான். அந்த ஆளைப் பார்த்ததும் ஜக்கு திடுக்கிட்டான். ஏன் தெரியுமா? முதலில் அவன் அடையாறு பாலத்தில் வந்து நின்ற

போது தாடியும் மீசையும் வைத்துக்கொண்டு பைத்தியக்காரன் போல இருந்தானே ஒருவன், அவனேதான் அந்த ஆள். ஆனுல் இப்போது அவன் நேரே அமெரிக்காவிலிருந்து வருபவனைப்போல— சூட் என்ன, டை என்ன, ஒழுங்கான கிராப்பு என்ன - அசப்பில் பார்த்தால் ஒரு பெரிய ஆபீஸரைப்போல இருந்தான்.

நல்ல காலமோ, என்னவோ, அவன் இவர்களுடைய கார் வந்ததையோ அவர்கள் காரை நிறுத்தி, கையில் துப்பாக்கியைப் பிடித்தவாறு சத்தம் போடாமல் கீழே இறங்கி வந்ததையோ கவனிக்கவேயில்லை. உல்ப் மட்டும் வண்டியிலேயே உட்கார்ந்திருந்தான். அருணுசலம் அந்த நீலக்காகிதத்தை ஒரு தடவை நன்ருகப் பார்த்துக்கொண்டு, "சரி வா, நாமும் அவன் பின்னுல் போகலாம். அவனைப்பின்

பற்றிப் போனாலே போதும். இந்த நீலக் காகிதத்தில் குறிப்பிட்டு இருக்கும் இடங்களைப் பார்த்து விடலாம்'' என்றார்.

ஒரே இருட்டு! ஆனாலும் அந்த ஆள் போவது, அவன் போகும் பாதை எல்லாம் அவர்களுக்கு நன்றாகவே தெரிந்தன. கொஞ்சதூரம் போனதும் அங்கே ஒரு கதவு தெரிந்தது. அந்த ஆள் அங்கே வந்ததும் நின்றான். சட்டைப் பையிலிருந்து தையோ எடுத்தான். அந்தக் கதவின் பூட்டைப் பிடித்துக் கொண்டு, 'டப் டப்' என்று ஓங்கி உடைக்கலானான்.

அருணாசலம் ஆகாயத்தைப் பார்த்தபடி, 'டுமீல்' என்று ஒரு முறை துப்பாக்கியினால் சுட்டுத் தீர்த்தார். 'ஜிவ்' என்று ஒரு ரவை பறந்து சென்றது. அந்த ஆள் 'ஹோ' என்று வீரிட்டபடி திடுக்கிட்டுத் திரும்பினான்.

"மிஸ்டர்! நீங்கள் சிரமப்பட வேண்டாம். எங்களிடம் இதோ சாவி இருக்கிறது. இந்தா! இதைப் போட்டுத் திற! உம்...ஏதாவது யோசனை செய்து அந்தப் பக்கம் இந்தப் பக்கம் திரும்பினாயோ, ஜாக்கிரதை!" என்று துப்பாக்கியைத் தூக்கிக் காட்டிக்கொண்டே தம் கையிலிருந்த சாவியை அவனிடம் தூக்கி எறிந்தார்.

கதவு திறந்தது.

"விளக்கைப் போடு!" என்று உத்தரவிட்டார் அருணாசலம்.

அறை எங்கும் திடீரென்று வெளிச்சம் பரவியது.

ஜக்கு பிரமித்துப்போனான். அங்கே அவன் கண்டவை, 'இது என்ன கனவா, நனவா?' என்று மலைக்கச் செய்தன.

அச்சடிக்கும் மெஷின்கள் இருந்தன. கீழே எல்லாம் கலர் மை அச்சடித்த காகிதங்கள் உலரப் போட்டுவைத்திருந்தன. டெலிபோன் ஒன்று இருந்தது. இன்னொரு பக்கம் வேறு ஏதோ ஒரு யந்திரம் இருந்தது. பக்கத்தில் கூடை கூடையாகப் புத்தம் புது நாணயங்கள் குவிந்து கிடந்தன. அப்போதுதான் ரெட்டியாருடைய டிராயரில் பார்த்த விஷயம் அவனுக்கு மறுபடியும் ஞாபகம் வந்தது.

"ஸார் ஸார், முன்னாலேயே சொல்ல மறந்துவிட்டேனே! ரெட்டியாருடைய டிராயரில் இதேபோல நோட்டுக்களும் சில்லறைகளும் இருப்பதைப் பார்த்தேன், ஸார்! நான் இந்தப் பங்களாவில் எல்லா இடங்களையும் பார்த்திருக்கிறேன். ஆனால் இந்த ஓர் அறைக்குள் மட்டும் வந்ததில்லை, ஸார்!" என்றான்.

அருணாசலம் மெதுவாக அந்த ஆளை நெருங்கி, "உன்னை ஒன்றும் செய்யமாட்டேன். ஆனால் உன் கைகளை மட்டும் தற்காப்புக்காகக் கட்டவேண்டியிருக்கிறது!" என்றார்.

அவன் சம்மதித்தான்.

அவனுடைய கையைக் கட்டி அழைத்துக்கொண்டு, கதவையும் பூட்டிக்கொண்டு அருணாசலம் ஜக்கு பின்தொடர வெளியில் வந்தார். கார் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிப் புறப்பட்டது. (தொடரும்)

பேரன்: மூன்றாம் வகுப்பு வண்டியில் அவ்வளவு சௌகரியம் இருக்காதென்றுதான் நாம் இரண்டாம் வகுப்பு வண்டியில் ஏறினோம்.

பாட்டி: அப்படியானால் நம் வீட்டுக் கோவிந்தன் மூன்றாம் வகுப்பில் கஷ்டப்படுகிறானே. அவனை இரண்டாம் வகுப்பில் சேர்ப்பதுதானே? —V. 57.



‘கோ’ விளையாட்டு

டி. கே. ராமமூர்த்தி
(R. 429)

இந்த விளையாட்டு ஆடுவதற்கு ஆனந்தமாகவும் குஷியாகவும் இருக்கும். இதை விளையாட 18 பேர் வேண்டும். (கிட்டத்தட்ட முன்பு வெளியான வட்டவிட்ட விளையாட்டைப் போன்றது தான் இந்த ஆட்டம்.)

ஆடும் முறை: விளையாடும் மைதானத்தில் 20' நீளம், 15' அகலம் உள்ள சதுரம் போடவேண்டும். சதுரத்துக்குள்ளேயே படத்திலுள்ளபடி 3 கோடுகள் வரையுங்கள். முதல் கோட்டையும் 3-ஆம் கோட்டையும் எல்லையாக வைத்துக்கொள்ள வேண்டும். அதைத் தாண்டிப் போனால் ‘அவுட்’. முதல் கோட்டிலும் மூன்ருவது கோட்டிலும் முறையே 6 பிள்ளைகளும் வரிசையாக நிற்கவேண்டும். 2-ஆவது கோட்டில் மாத்திரம் முறையே 6 பேரும் கிழக்கு மேற்காக மாறி மாறி உட்காரவேண்டும். அதாவது இடதுகாலை மண்டியிட்டுக் கொண்டு படத்தில் காட்டியபடி உட்கார வேண்டும். நடுக் கோட்டில் முதல் முனையில் ஒருவனும் கோடி முனையில் ஒருவனும் நிற்க வேண்டும். முதல் கோட்டில் ஒருவனும் 3-ஆவது கோட்டில் ஒருவனும் வரவேண்டும்.

முதல் பையன் முன்புறம் உள்ள பையனைத் துரத்தவேண்டும். ஓடும் பையன் 2-ஆவது கோட்டைச் சுற்றிக்கொண்டு ஓடவேண்டும். ஓடிக்கொண்டே வந்து யாராவது ஒரு பையனுடைய முதுகில் கையை வைத்து, ‘கோ’ என்று கூறிவிட்டு உட்காரவேண்டும்.

எழுந்த பையன் கோட்டின் இரு முனைகளிலும் பிள்ளைகளைச் சுற்றிக்கொண்டு ஓடவேண்டும். துரத்துபவன் குறுக்கே நுழையக் கூடாது. நுழைந்தால் அவன் ‘அவுட்’. இப்படியே ஒவ்வொருவனும் ஒருவர்பின் ஒருவராக ஓடவேண்டும். ஆட்டம் ஆட ஆட, தமாஷாக இருக்கும். விளையாடிப் பார்க்கிறீர்களா?



வெண்மதி

'சசிதேவன்'

ரப்பர்ப்பந்து போலவே
'ராவி'ல் வந்து வானிலே
எப்படிநீ தோன்றினாய்?
என்னிடம் சொல்வெண்மதி!

விட்டெறிந்த தட்டுப்போல்
விண்ணில்வந்து வட்டமாய்
பட்டப்பகல் போலொளி
பெய்யும்மாயம் என்னவோ!

வானுலகம் தன்னிலே
வீற்றிருந்து ஆண்டவன்
மாநிலத்தை நோக்கிடும்
மாயக்கண்ணா டியோதான்

பிறைமதியாய்த் தோன்றிப்பின்
பூரணமாய் வளர்ந்து நீ
குறைந்துகுறைந்து தேய்வதேன்
கூறிடுவாய் வெண்மதி!

உன்னைக்காணும் போதிலென்
உள்ளம் மகிழ்ந்து துள்ளுதே
என்னுடன்விளை யாடிட
இங்குவாராய் வெண்மதி!

உல்லாசப் பிரயாணம்

வி. எஸ். இந்திராணி

மணி பன்னிரண்டு அடித்தது. மாணவர்கள் அனைவரும் உற்சாகத்துடன் ஆரவாரம் செய்து கொண்டு, பள்ளியிலிருந்து வெளியே வந்தார்கள். அன்று கோடை விடுமுறை ஆரம்பம். தங்கள் விடுமுறையைக் கழிக்கப் போகும் விதத்தைப்பற்றிச் சிறுவர்கள் பேசிக்கொண்டு நடந்தார்கள். எல்லாருக்கும் தலைவனான கோபாலன் தன் நண்பர்களின் கூட்டத்துக்கு இடையே தலை நிமிர்ந்து பேசலானான்: "டேய் முகுந்தா! நீ லீவுக்கு எங்கே போகப் போகிறாய்?"

"நான் மாயவரம் போகப் போகிறேன்" என்றான் முகுந்தன்.

"ஜயராம், நீ எங்கே போகப் போகிறாய்?"

"நான் கும்பகோணம் போகப் போகிறேன்" என்றான் அவன்.

"ஏண்டா ஸ்ரீதர், நீ எங்கே போகப் போகிறாய்?" என்று கேட்டான் முகுந்தன். ஸ்ரீதர் பதிலொன்றும் கூறாமல் தலையைக் குனிந்தபடியே நடந்துகொண்டிருந்தான்.

"அடே, இந்தப் பிருகஸ்பதி திருப்பதிக்குப் போகப் போகிறானடா. திருப்பதிக்குப் போய்விட்டு, கும்பகோணம் பித்தளைச் செம்புமாதிரி தலையை வைத்துக் கொண்டு, ராந்தல் கம்பம்மாதிரி நின்றானானால், பார்க்கப் பாலசந்நியாசி மாதிரி இருக்கும்டா. அப்பொழுது இவருக்கு ஒரு டீபார்ட்டி கொடுத்து, மொட்டைத் தலையைப் போட்டோ பிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று ஏளனத்தோடு கூறினான் கோபாலன்.

அவன் கூறியதைக் கேட்ட தும் பிள்ளைகளெல்லாரும் கொல்லென்று நகைத்தார்கள். ஸ்ரீதருக்கு அழுகை வந்துவிடும்போல் இருந்தது. அவன் தன்னை மெதுவாகச் சமாளித்துக்கொண்டு, "நான் திருப்பதிக்குப் போவதாக யாரடா சொன்னது? எல்லாம் வெறும் பொய்!" என்று ஒரு புளுகைக் கூறினான்.

"ஏய்! ஏண்டா பொய் சொல்கிறாய்? நேற்று நான் உன் வீட்டுக்கு வந்திருந்தபோது உன் அப்பாவும் அம்மாவும் பேசிக் கொண்டிருக்கவில்லை? 'இந்த லீவில் எப்படியும் திருப்பதிக்குப் போய் ஸ்ரீதருக்கு மொட்டை அடித்து விடவேண்டும்' என்று பேசிக்கொண்டிருந்தார்களே. ஏன் சாடு விடுகிறாய்?" என்றான் கோபாலன்.

ஸ்ரீதருக்குத் துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. தன் அழுகையை மறைப்பதற்காகப் பையை ஆட்டிக் கொண்டு வேகமாக நடக்கத் தொடங்கினான்.

பின்னாலிருந்து வந்த நண்பர்களின் பரிகாசச் சொற்கள் அவன் காதைத் துளைத்தன. அவனுக்குத்

தன் தாய்மீதும் தந்தைமீதும் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. எதற்காகத் தனக்கு மொட்டை அடிப்பதாகப் பிரார்த்தனை செய்துகொண்டார்கள்? கோபாலன் பங்களூர் போகப் போகிறானும்; மூன்று மாதமாகப் பெருமை அடித்துக்கொண்டிருக்கிறான். அவன் ஜம்மென்று பங்களூரிலிருந்து திரும்புவான். முகுந்தன் ஜோராக மாமா வீட்டிலிருந்துவருவான். தன் நண்பர்களெல்லாரும் இப்படி இருக்க, தான் மட்டிலும் மொட்டைத் தலையுடன் திரும்புவதா? "இப்பொழுதே கோபாலன் செய்யும் கேலி சகிக்க முடியவில்லை. அப்புறம் உயிரோடு வைக்கமாட்டான். 'திருப்பதிக்கு வரமாட்டேன். மொட்டை அடித்துக் கொள்ளமாட்டேன்' என்று சொன்னாலோ, அப்பப்பா, அப்பா நரஸிம்மாவதாரம் எடுத்துத் தோலை உரித்துவிடுவார். ஸ்வாமி பகவானே, எப்படியாவது என்னை மொட்டை அடிக்காமல் காப்பாற்றேன்!" என்று வேண்டிக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தான்.

ஸ்ரீதரின் பிரார்த்தனை துளிக்கூடப் பலிக்கவில்லை. அவன் திருப்பதிக்கு வந்து ஒரு மாதமாகிவிட்டது. அவன் தந்தை ஒரு மாதமாக ஊரைச் சுற்றிக் காட்டியபோதெல்லாம் அவன் உள்ளம் ரொம்பவும் உற்சாகத்தோடு இருந்தது. லீவு கழியக் கழிய மொட்டை அடித்துக் கொள்ளப் போகிறோம் என்ற ஓர் எண்ணம் தோன்றி அவனை வதைத்தது.

"அடே, இன்று உனக்குப் பிரார்த்தனை செலுத்தவேண்டும். சீக்கிரம் கிளம்பு!" என்று சொன்னார் தகப்பனார்.

ஸ்ரீதரின் மனம் பக்பக்கென்று அடித்துக்கொண்டது. மௌனமாகப் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்துகொண்டான். அப்பொழுது, "ஸ்ரீதர், ஸ்ரீதர்!" என்று யாரோ தன் பெயரைச் சொல்லி அழைப்பதைக் கேட்டு, சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தவன் கல்லாய்ச் சமைந்து போனான்.

"என்டா புளுகுமரம்! 'திருப்பதிக்குப் போகவே மாட்டேன்' என்று சொல்லிவிட்டு எனக்கு முன்னால் இங்கே வந்து நிற்கிறாயே!" என்று உற்சாகத்தோடு பேசிக்கொண்டே எதிர் வீட்டிலிருந்து வேகமாக ஓடி வந்தான் கோபாலன். ஸ்ரீதரனுக்குத் தன் தலையில் பெரிய பாறாங்கல்லே புரண்டு வந்து விழுந்துவிட்ட மாதிரி இருந்தது. அவன் தொண்டைக்குள் என்னவோ ஒன்று புகுந்துகொண்டு பேசவிடாமல் அமுக்கியது.

"என்டா செக்குலக்கை! வாயிலே என்ன கொழுக்கட்டையா? இன்னும் மொட்டை அடித்துக் கொள்ளவில்லை? இப்பொழுதுதான் மலைக்குப் போகிறாயா? மலைக்குப் போகிறவன் இப்படியா போகிறது? பட்டை பட்டையாக நாமத்தைப் போட்டுக்கொண்டு, 'கோவிந்தா' போட்டுக்கொண்டு போனால்தான்டா சுவாமிக்குத் திருப்தியாக இருக்கும்!" என்று மேலும் கலாட்டா செய்தான் கோபாலன்.

இதற்குள் ஸ்ரீதரின் மனம் திடமடைந்து விட்டது. "அடே மண்டுகம்! விஷயத்தைத் தெரிந்துகொள்ளாமல் எதற்கு ரப்பர்ப் பந்து மாதிரி குதிக்கிறாய்? நாளைக்கு



என்னுடைய சிற்றப்பா பெண்ணுக்குக் கல்யாணம். அதற்காக இங்கு வந்திருக்கிறோம்'' என்று தந்தைக்கு எட்டாத குரலில் ஒரு புளுகு மூட்டையை அவிழ்த்துவிட்டான் ஸ்ரீதர்.

''அப்படியா? மன்னித்துக் கொள்! தெரியாமல் கூறிவிட்டேன். நான் லீவுக்குப் பங்களூருக்குத்தான் போனேன். என்னுடைய மாமாவைத் திடீரென்று இந்த ஊருக்கு மாற்றிவிட்டார்கள். நானும் இங்கு வந்துவிட்டேன். அதோ பார், என் மாமா! இப்பொழுது அவசரமாக ஓர் இடத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறோம். பிறகு சந்திக்கலாம்'' என்று கூறிக் கொண்டே, மாமாவுடன் சென்று விட்டான் கோபாலன். ஸ்ரீதருக்கு வயிற்றைக் கலக்கியது. 'மொட்டை அடித்துக்கொண்டு திரும்பும் பொழுது கோபாலனின் கண்ணில் பட்டுவிட்டால் என்ன செய்வது?' என்று நினைத்து நடுங்கினான்.

ஸ்ரீதர் திருப்பதிக்கு வந்த வேலை முடிந்துவிட்டது. மிகவும் வருத்தத்துடன் தன் மொட்டைத் தலையைத் தடவித் தடவிப் பார்த்துக் கொண்டு, ரெயிலில் ஏறி உட்கார்ந்தான். ஊருக்குப் போனதும் நண்பர்களுக்கு என்ன பதில் சொல்வது என்று ஜன்னலைப் பிடித்த வண்ணம் யோசித்துக்கொண்டிருந்தான்.

''ஏ ஸ்ரீதர், வெளியே எட்டிப் பார்க்காதே! கண்ணில் கரித்தூள் விழும்'' என்று அதட்டிவிட்டு, படுத்து விட்டார் அப்பா. ஸ்ரீதர், தந்தையின் வாய்க்குப் பயந்து கொண்டு, மூலையாக உட்கார்ந்து கொண்டான்.

வண்டி ஊதிவிட்டது. அப்பொழுது கால்சட்டையும், தொப்பியும், புஷ்கோட்டும், ரிஸ்ட்வாட்சும் அணிந்த ஒரு பையன் கையில் ஒரு பெட்டியுடன், அவசரமாக ஸ்ரீதர் இருந்த பெட்டியில் ஏறினான். அவனைக் கண்டதும் ஸ்ரீதருக்குப் பகீரென்றது. 'ஐயையோ, கோபாலன் வந்து தொலைந்து விட்டானே!' என்று வாய் விட்டு அலறப் போனவன் சட்டென்று சமாளித்துக்கொண்டான். பிறகு வேர்த்துக் கொட்டுவதையும் லட்சியம் செய்யாமல், கோபாலன்

தன்னைப் பார்க்காதபடி, ஒரு பெரிய போர்வையை எடுத்து, காலிலிருந்து தலைவரையில் மூடிக்கொண்டான். மூச்சு விடவும் பயப்பட்டு முடங்கிக் கொண்டான். வண்டியில் ஏறிய கோபாலன் சுற்றும் முற்றும் பார்த்தான். அவனுக்கு எங்கும் இடம் கிடைக்கவில்லை. ஸ்ரீதர் படுத்திருந்த இடத்தில் அவன் காலடியில் உட்கார்ந்துகொண்டான்.

ஸ்ரீதருக்குக் கால் முதல் தலைவரை நடுங்கியது. 'நேற்றுத்தானே திருப்பதிக்கு வந்தான், கடன்காரன்! அதற்குள் இங்கே என்னத்துக்கு வந்திருக்கிறான்? ஆஹா, அவனுக்கு என்ன! அவன் மாமா கால் சட்டையும் தொப்பியும், புஷ்கோட்டும் வாங்கிக் கொடுத்திருக்கிறார். அவன் ஜம்பமாக ஊரில் வந்து எல்லோருக்கும் காட்டுவான். நான் எதைக் காட்டுவது? மொட்டைத் தலையையா?' ஸ்ரீதர் வேதனையுடன் கண்களை மூடிக்கொண்டான்.

"ஊர் வந்துவிட்டது. சீக்கிரம் இறங்குடா" என்று அவசரப்படுத்தினார். அப்பா. ஸ்ரீதர் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான். ஸ்டேஷனில் ஜயராம், முகுந்தன் முதலியோர் நின்றிருப்பதைக் கண்டதும் திகைத்துவிட்டான். அவர்கள் கோபாலனை வரவேற்க வந்திருப்பார்கள் என்று நினைத்தான். முதலில் கோபாலன் ஜம்மென்று இறங்கினான். முகுந்தன் கோபாலனின் கையைப் பிடித்துச் சந்தோஷத்தோடு வரவேற்றான். பின்னல் அசடு வழிய, மொட்டைத் தலையுடன் இறங்கிய ஸ்ரீதரைக் கண்டதும் ஹோவென்று கையைக்கொட்டிச் சிரித்தார்கள் நண்பர்கள். ஸ்ரீதருக்கு அவமானத்தினால் அங்கேயே பிராணனை விட்டு விடலாம் போலிருந்தது. கோபாலன் ஆச்சரியத்துடன், "அடே, இவன் திருப்பதியில் என்னைப் பார்த்துவிட்டு, சிற்றப்பா பெண்ணுக்குக் கல்யாணம் என்று கூறி டபாய்த்தாண்டா. டே! மொட்டைத் தலையைப் பாருங்கடா!'' என்று கூவினான். ஸ்ரீதர் அவமானம் தாங்க முடியாமல் அப்பா இருப்பதையும் மறந்து, ஓடத் தொடங்கினான். கோபாலனும் மற்றவர்களும் துரத்திக்கொண்டு ஓடினார்கள். ஸ்ரீதர் ஓடி ஓடிக் களைத்துப் போனான். நண்பர்கள் ஓடி வந்து, அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். ஸ்ரீதர் திமிறிக் கொண்டே, நண்பர்களை நோக்கி ஓர் உதைவிட்டான்.

கனவு இந்தக் கட்டத்துக்கு வந்ததும் ஸ்ரீதர் காலை ஓர் உதை உதைத்துக்கொண்டு அலறிய வண்ணம் எழுந்து உட்கார்ந்தான். அவன் காலடியில் உட்கார்ந்தபடியே தூங்கிக்கொண்டிருந்த கோபாலனும் கதறிக்கொண்டு கண்ணை விழித்தான். ஸ்ரீதர் தூக்கத்தில் உதைத்த உதையில் கோபாலனின் தலையிலிருந்த தொப்பி கீழே விழுந்தது. அவன் தூக்கம் கலைந்துவிட்டது. குழப்பத்தோடு எழுந்து உட்கார்ந்த ஸ்ரீதருக்குக் கோபாலனின் தலையைக் கண்டதும் மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. கோபாலன் தலை ஸ்ரீதரின் தலையைக் காட்டிலும் மழ மழவென்றிருந்தது. "அடே திருப்பதி மொட்டை! இதென்னடா?'' என்று கத்தினான் ஸ்ரீதர். கோபாலன் முகத்தில் விளக்

கொண்டு வழிய விழித்தான்.

"வண்டா, இதென்ன வேஷம்டா! இவ்வளவு நாளாக என்னைக் கேலி செய்து பிராணனை வாங்கிவிட்டு, இன்று நீயே மொட்டை அடித்துக்கொண்டு வந்திருக்கிறாயே. உனக்குப் பயந்து நான் தூக்கத்தில்கூட உளறிக் கொண்டு எழுந்துவிட்டேண்டா!" என்றான் ஸ்ரீதர்.

கோபாலன் முகத்தைத் தொங்கப் போட்ட வண்ணம் கூறினான்: "அடே, என் மிரட்டலெல்லாம் உன் வரையில்தான். என் மாமாவிடம் ஒன்றும் செல்லாது. நான் பங்களூருக்கும் போகவில்லை, ஒன்றும் இல்லை. வேண்டும் என்றே நான் அப்படிச் சொன்னேன். மாமா மொட்டை அடித்து என்னை ரெயிலேற்றி அனுப்பிவிட்டார். இவ்வளவு நாளாக உன்னைக் கேலி செய்ததற்காக என்னை மன்னித்து விடு!"

"மன்னிப்பதாவது! இவ்வளவு நாட்களாக நீ செய்த கேலிக்கெல்லாம் சேர்த்து, இன்று ஓர் உதை கொடுத்து வஞ்சம் தீர்த்துக் கொண்டுவிட்டானே" என்றார் ஸ்ரீதரின் அப்பா.

ஸ்ரீதரின் முகத்தில் ஆனந்தம் பொங்கிற்று. தான் மட்டும் மொட்டை அல்ல; கோபாலனும் கூடத்தான் மொட்டை என்று அறிந்ததும் அவனுக்கு அளவில்லா உற்சாகம் உண்டாயிற்று.

ஒன்றரை மாத விடுமுறையையும், 'மொட்டை அடித்துக்கொள்ளப் போகிறோமே' என்ற வேதனையுடனேயே கழித்த நண்பர்கள் இருவரும் அந்த ரெயில் பிரயாணத்தை உற்சாகத்தோடு முடித்தார்கள்.



ஸ்ரீதர் ஓர் உதைவிட்டான்.

குட்டிக் கதைகள்

ராமசர்மா

இரண்டு கிளிகள்

ஒரு காட்டில் ஒரு கிளிக்கு இரண்டு குஞ்சுகள் இருந்தன. ஒரு நாள் ஒரு வேடன் அந்தக் குஞ்சுகளை எடுத்துக் கொண்டுபோய்த் தன் குடிசைச்குள் ஒரு கூண்டுக்குள் அடைத்து வைத்திருந்தான். அப்போது ஒரு குஞ்சு யாருக்கும் தெரியாமல் தப்பிப் பறந்து ஓடிவிட்டது. இன்னொன்றை அங்கேயே வேடன் வளர்த்து வந்தான்.

தப்பிப்போன குஞ்சை ஒரு முனிவர் பார்த்துத் தம் ஆசிரமத்துக்கு எடுத்துப் போய் வளர்த்து வந்தார்.

இப்படி இருக்கையில் ஒரு சமயம் காட்டுக்கு வேட்டையாட வந்த ஒரு ராஜா தன்னுடைய காவற்காரனைத் தேடி வேடர்கள் குடிசைக்கு வந்தான். அப்போது கூண்டுக்குள் உட்கார்ந்திருந்த கிளி, "ஏ வேடர்களே! வாருங்கள்! வாருங்கள்! யாரோ அந்நியன்! குதிரைமேல் வருகிறான்! அவனைப் பிடியுங்கள்! கட்டுங்கள்! கொல்லுங்கள்!" என்று கத்திற்று. அதைக் கேட்ட அரசன் பயந்துகொண்டு வேகமாகக் குதிரையை விரட்டத் தொடங்கினான்.

அங்கிருந்து சென்ற அரசன் இன்னொரு காட்டை அடைந்தான். அங்கே முனிவர்கள் வசிக்கும் ஆசிரம வாசலில் ஒரு கூண்டிலிருந்த கிளி பின்வருமாறு பேசிற்று: "மகாராஜா! வரவேண்டும்! அமருங்கள்! இந்த இனிய கனிகளை அருந்துங்கள்! முனிவர்களே, மன்னரை அழைத்து உபசரியுங்கள்!"

அதைக் கேட்ட அரசன் திகைத்து அந்தக் கிளியிடம் போய், தான் கண்ட மற்றொரு கிளியைப்பற்றி விவரித்தான்.

அதற்கு அந்தக் கிளி, "யாருக்குமே பெரியோர் சகவாசத்திஞல் தான் அறிவு வளர்கிறது" என்று சொல்லிற்று.

—இந்தியக் கதை - பஞ்சதந்திரம்.

நெல்வயலில் நெருப்பு!

ஜப்பான் தேசத்தில் முன் ஒரு காலத்தில் ஒரு மலை இருந்தது. அந்த மலையின் உச்சியில் ஓர் அறிவாளியான கிழவர் வசித்துவந்தார். அந்த மலையின் அடிவாரத்தில் ஒரு சின்ன கிராமம் இருந்தது. கிராமத்தைச் சுற்றிலும் நெல்வயல்கள். அந்த மலை உச்சியிலிருந்து பார்த்தால் அவ்வளவு வயல்களும், அவைகளுக்கு அப்பால் உள்ள நீண்ட கடலும் தெரியும்.

மலையின்மேல் வசித்த கிழவரும் அவருடைய பேரப் பிள்ளையும் இந்தக் காட்சியை எப்போதும் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அப்படித்தான் ஒரு சமயம் அறுவடைக்கு முன்ஞல் ஒரு நாள் கிழவர் பார்த்துக்கொண் டிருக்கையில், கடலில் ஏதோ ஜலம் உயரமாக எழும்புவதைப் பார்த்தார். கவனித்துப் பார்த்ததும் விஷயத்தை அறிந்துகொண்டார். சற்று நேரத்தில் கடல்நீர் பொங்கிவந்து கிராமத்தை அழித்துவிடும். கிராமத்து ஜனங்களை எப்படிக் காப்பாற்றுவது?

அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. தன் பேரனிடம், "போய், ஒரு கொள்ளிக்கட்டையைக் கொண்டுவா" என்ருர். பையன் கொண்டுவந்தான். அதை வாங்கிக்கொண்டு, பக்கத்தில் இருந்த நெல்வயலின் சமீபம் போய் அந்த வயல்களுக்குத் தீ வைத்துவிட்டார். சற்று நேரத்தில் வயல்கள் தீப் பிடித்துக்கொண்டு எரிய ஆரம்பித்தன. தீ ஜ்வாலைகள் புகையைக் கிளப்பிக் கொண்டு வானத்தைப் போய்த் தொட்டன.

வயல்கள் எரிவதைக் கண்ட கிராமத்து ஜனங்கள் அலறிப் புடைத்துக்கொண்டு ஒருவர் பாக்கி இல்லாமல் மலை உச்சிக்கு ஓடிவந்தார்கள். சாப்பாடு போடும் வயல்கள் எரிந்தால் வீட்டுக்குள் உட்கார்ந்திருப்பார்களா?

'இந்தமாதிரி அக்கிரமம் யார் செய்தது?" என்று அவர்

கள் கேட்டார்கள். கிழவனார், "நான்தான் செய்தேன்" என்று சொல்லி, தூரத்தில் பொங்கிக்கொண்டு வரும் கடலைக் காட்டினார். "அப்படிச் செய்யாவிட்டால் நீங்கள் எல்லோரும் வீடுகளை விட்டு வரமாட்டீர்கள். உங்களைக் கடல் வெள்ளம் அடித்துக்கொண்டு போயிருக்கும்" என்றார் அவர். கிராமவாசிகள் கிழவனாரின் சாதுரியத்தை மெச்சினார்கள்.

—ஜப்பானியக் கதை.

மியாவ்! மியாவ்!

ஒரு சின்னப் பூனை வீட்டைவிட்டு வெகுதூரம் போய்விட்டது. திரும்பி வீட்டுக்கு வர அதற்கு வழி தெரியவில்லை.

யாரைப் போய் வழி கேட்பது? அதற்குத் தெரிந்த ஒரே வார்த்தை, "மியாவ்" ஒன்றுதான். பசித்தாலும் அதுதான்; பயந்தாலும் அதுதான். அதனால் வழியில் ஒரு மண்புழுவைக் கண்டதும், "எங்கள் வீடு எங்கிருக்கிறது?" என்ற அர்த்தத்தில், "மியாவ்! மியாவ்?" என்றது. மண்புழுவுக்கு அந்தப் பாஷை தெரியாது. அதனால் அது பேசாமல் போய்விட்டது.

பிறகு ஒரு பட்டுப்பூச்சியைப் பார்த்தது. அதனிடமும், "மியாவ்! மியாவ்?" என்றது. அதுவும் ஒன்றும் சொல்லாமல் பயந்தது. பிறகு நாயைக் கண்டது. அதனிடமும், "மியாவ்! மியாவ்?" என்று கேட்டது. "ளொள்! ளொள்!" என்று குரைத்துக்கொண்டே நாய் போய்விட்டது. பிறகு ஒரு பசு மாட்டைக் கண்டது. அதனிடமும், "மியாவ்! மியாவ்?" என்று கேட்டது. அது, "மா" என்று கத்திக்கொண்டு போய்விட்டது.

கடைசியில் ஒரு சின்னப் பெண் தெருவோடு ஓடிவந்தாள். அவளிடம் போய், "மியாவ்! மியாவ்?" என்று கேட்டது. அந்தப் பெண் உடனே அந்த அழகிய பூனைக் குட்டியைத் தூக்கி வைத்துக்கொண்டு, "வாடா என் கண்ணு! உன்னை என் வீட்டுக்கு அழைத்துப் போகிறேன்!" என்று கொஞ்சிக்கொண்டே எடுத்துப் போனாள். பூனைக்குட்டி சந்தோஷம் அடைந்தது.

—அமெரிக்கக் கதை.

முயல்கள் மகாநாடு

'சோமசன்மா'

ஒரு காட்டில் முயல்கள் எல்லாம் மகாநாடு ஒன்று கூட்டின. சின்ன முயல்கள்; பெரிய முயல்கள்; வெள்ளை முயல்கள்; கறுப்பு முயல்கள்; குழி முயல்கள்; காட்டு முயல்கள் - ஆக எல்லா முயல்களும் கூட்டத்துக்கு வந்திருந்தன. தலையெல்லாம் நரைத்துப் போயிருந்த ஒரு கிழட்டு முயல்தான் கூட்டத்துக்குத் தலைவர்.

இந்த முயல்கள் எதற்காகக் கூட்டம் போட்டன? அவைகளுக்கு என்ன வந்துவிட்டது? இதெல்லாம் நீங்கள் கேட்கும் கேள்விகள், இல்லையா?

அதனால் காரணத்தைச் சொல்லுகிறேன். முயல்கள் ரொம்பவும் சாதுவான பிராணிகள் என்பது உங்களுக்குத் தெரியும். அடித்தால்கூட அழத் தெரியாது; அவ்வளவு சாது.

உலகத்தில் சாதுவாய் இருப்பவர்களைக் கண்டால் எல்லாரும் விரட்டுவார்கள் அல்லவா? அதைப்போலவே இந்த முயல்களையும் எல்லாரும் விரட்டினார்கள். யாராவது வேட்டையாட வேண்டும் என்றால் முதலில் முயல்களைத்தான் வேட்டையாடுவார்கள். ஏனென்றால் சிங்கம், புலிகளை வேட்டையாடுவது என்றால் அவைகள் கடித்துவிடும் அல்லவா? அதனால்தான். காட்டில் உள்ள மற்ற மிருகங்களுக்குக்கூட முயல்களைக் கண்டால் இளப்பம். சிங்கம், புலிகள் எல்லாம் முயல்களைத் தான் அடித்துத் தின்னும்.

அந்த முயல்கள் புல் தரையில் மேய்ந்துகொண்டிருக்கும். அப்போது, 'குபீல் குபீல்!' என்று எங்கேயாவது துப்பாக்கிச் சத்தம் கேட்கும். உடனே இவைகள் பயந்து அடித்துக் கொண்டு ஓடிப் போய் ஒளிந்துகொள்ளும். அதுமட்டும் இல்லை; யானைகள் கூட்டம் கூட்டமாகத் தண்ணீர் குடிக்க ஓடும்போது இந்த முயல்களை மிதித்து நசுக்கிக்கொண்டுதான் ஓடும். மான் கூட்டம் வேடர்களைக் கண்டு பயந்து கொண்டு ஓடும்போதும் இவைகளுக்குத்தான் ஆபத்து. வேடர்களுடன் கூட நாய்கள் வரும் அல்லவா? அவைகள் வந்தாலும் முயல்களுக்குத்தான் சனியன் பிடித்துவிடும். தலைக்கு இரண்டு முயல் குட்டியாக அந்த நாய்கள் டிபனுக்காகத் தூக்கிக் கொண்டு போய்விடும்.



இப்படியாகத் தினம் உயிருக்காகப் பயந்து ஓடிக்கொண்டிருந்தால் அந்த முயல்கள் என்னதான் செய்யும்? எப்படிச் சாப்பிடுவது, எப்படிக் குடித்தனம் பண்ணுவது? இந்தக் கஷ்டத்தை எப்படியாவது சமாளிக்க ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டும் என்றுதான் அந்த முயல்கள் கூட்டம் போட்டன.

பலமுயல்கள் எழுந்திருந்து கூட்டத்தில் பேசின. ஒரு முயல், "நாம் எல்லாரும் ஒன்று சேர்ந்து நம்முடைய எதிரிகளைச் சண்டையிட்டுக் கொன்றுவிடுவோம்" என்றது.

இன்னொரு முயல், "நமக்குச் சண்டையிட்டுப் பழக்கம் கிடையாது. மேலும் நம்மிடம் கத்தி, துப்பாக்கி முதலிய ஆயுதம் ஒன்றும் இல்லை. ஆகையினால் சாத்துவிகமாகச் சட்டமறுப்புச் செய்வோம்" என்றது.

மற்றொரு வெள்ளை முயல், "சட்டமறுப்புச் செய்வது கோழைத்தனம். அமெரிக்காவுக்கு லெட்டர் போட்டால் அவர்கள் ஆயுதம் தருவார்கள். அணுக்குண்டைக்கூடத் தருவார்கள். ஒரே அடியாய் நம்முடைய எதிரிகளையெல்லாம் ஒழித்துக்கட்டிவிடலாம்" என்றது.

அதைக் கேட்ட ஒரு சிவப்பு முயல் எழுந்து ஆவேசத்தோடு பேசும்: "நாம் ருஷ்யாவுடன் சேருவோம். அப்போதுதான் பாட்டாளி மக்களாகிய நமக்கு விடுதலை கிடைக்கும்.

எளியார், வலியார் என்ற வித்தியாசம் இன்றி நாம் எல்லாரும் ஒன்றாய் வாழலாம்.''

இப்படிப் பல முயல்கள் எழுந்து, தலைக்குத் தலை பேசும் போது தலைவர் முயல் எல்லாரையும் அடக்கிவிட்டுப் பின்வருமாறு பேசிற்று: ''நீங்கள் எல்லாரும் நாம் ஜாதியில் முயல்கள் என்பதை மறந்துபோய்ப் பேசுகிறீர்கள். நம்முடைய பிறவிக் குணமே பயந்த சுபாவம். நமக்குச் சண்டை எப்படி வரும்? நாம் எல்லாரும் சேர்ந்து கடவுளிடம் போய் முறையிடுவோம்!''

அப்போது இன்னொரு கிழட்டு முயல், ''கடவுள்தான் கண்ணில் அகப்படுவதில்லையே. நாம் எப்படி அவரைப் பார்ப்பது?'' என்று கேட்டது. மற்ற முயல்கள், ''ஆமாம், ஆமாம்!'' என்று ஆமோதித்தன. தலைவர் முயல் உடனே, ''பின் நாம் என்னதான் செய்வது?'' என்று உரக்கக் கேட்டது. அப்போது ஒரு குரல், ''தற்கொலை செய்துகொள்வது!'' என்று கணீரென்று கேட்டது. உடனே மற்ற முயல்கள், ''அதுதான் சரி! அதுதான் சரி!'' என்று ஆரவாரம் செய்தன.

இப்படியாக அந்த முயல்கள் எல்லாம் ஒன்றுகூடித் தற்கொலை செய்துகொள்வது என்று முடிவு செய்தன. ஒரு முயல் விஷத்தை விழுங்கிவிடலாம் என்று சொல்லிற்று. ஆனால் அத்தனை பேருக்கும் விஷம் வேண்டுமே! அதனால் அது பிரயோசனம் இல்லை. கழுத்தில் கயிற்றைக் கட்டிக்கொண்டு தூக்குப் போட்டுக்கொள்ளலாம் என்றால் கயிற்றுக்கும்



பஞ்சமாயிருந்தது. கத்தியால் குத்திக்கொள்ளலாம் என்று ஒரு முயல் சொல்லிற்று. மற்ற முயல்கள் அதை ஒப்புக் கொள்ளவில்லை. கத்தியால் குத்திக்கொண்டால் வலிக்கும் அல்லவா? அதனுல்தான்.

கடைசியாக எல்லாமாகச் சேர்ந்து ஒரு கமிட்டியை நிய மனம் செய்து, வலிக்காமல் சீக்கிரம் செத்துப்போக ஒரு வழி யைத் தேடிக் கண்டுபிடித்தன. அதாவது, எல்லாமாகக் குளத் தங்கரைக்குப் போய், கிழக்கு முகமாக நின்றுகொண்டு, கண்ணையும் மூடிக்கொண்டு, "ராமா, ராமா!" என்று சொல்லிக் கொண்டே தண்ணீருக்குள் குதித்துவிடுவது. அவ்வளவுதான்!

இந்த விதமாக எல்லா முயல்களும் குளத்துக்குள் குதித்து உயிரை விடுவதற்காக ஒரு நல்ல நாளாகப் பார்த்துக்கொண்டு கூட்டமாகக் கிளம்பின. போகும் வழியெல்லாம் "ரகுபதி ராகவ ராஜாராம்" என்று பாடிக்கொண்டே போயின.

அங்கே குளத்தங்கரையில் ஒரு நூற்றைம்பது தவளைகள் பள்ளிக்கூடம் போட்டுப் பாடம் சொல்லிக்கொண்டு உட்கார்ந் திருந்தன. அவைகள் இப்படி முயல்கள் வரிசையாகச் சிப்பாய் களைப்போல் வருவதைப் பார்த்துப் பயந்தன. தங்களைக் கொல்லத்தான் யாரோ படையெடுத்து வருகிறுர்கள் என்று நினைத்து அவைகள் பொத்பொத்தென்று தண்ணீருக்குள் குதித்தன.

இவைகள் குதிப்பதைப் பார்த்த முயல்கள் சட்டென்று நின்றன. அவைகள் ஏன் நின்றன என்ருல் அவைகளுக்கும் பயம். அதாவது தங்களுடைய விரோதிகள்தான் யாரோ தண்ணீருக்குள் குதித்து அவைகள் விழுந்த உடனே பிடித்துக் கொள்ளப் போகிறுர்கள் என்று நினைத்துவிட்டன.

"இப்போது என்ன செய்கிறது?" என்றது தலைவர் முயல். மற்றவைகள், "எங்களுக்குத் தெரியவில்லையே!" என்றன.

அப்போது அங்கே ஒரு கல்லின்மேல் உட்கார்ந்திருந்த ஒரு நண்டு அவைகளைப் பார்த்துச் சிரித்துவிட்டுச் சொல்லும்:

"ஏ, முயல்களே! நீங்கள் ஏன் அவர்களைப் பார்த்துப் பயப்படுகிறீர்கள்? உங்களைப் பார்த்துப் பயந்துகொண்டு இந்தத் தவளைகள் ஓடுகின்றன. உலகத்தில் நாம்தான் தாழ்ந்தவர்கள் என்று நினைக்கிறோம். ஆனுல் நம்மைவிடத் தாழ்ந்தவர்களும் இருக்கிறுர்கள். ஆகையினுல் நாம் எதற்கும் பயப்படக்கூடாது. தைரியமாய் இருக்கவேண்டும். பேசாமல் வீட்டுக்குப் போங்கள்!"

ஆகையினுல் பிள்ளைகளே, அந்த நண்டு சொன்னது நியாயந்தான் என்று தெரிகிறது அல்லவா?

மீனாவின் மனம்

சரோஜா ராமமூர்த்தி

மீனா: எட்டு வயதுப் பெண். முழுப்பெயர் மீனாக்ஷி.
லலிதா: மீனாவின் தாயார்.
சிவராமன்: மீனாவின் தந்தை.
ராஜம்: வேலைக்காரி.



[காலை எட்டு மணி. சமையல் அறையில் காப்பிக்கடை இன்னும் ஓய்ந்தபாடில்லை.]

மீனா: (அரைத் தூக்கத்தில் பாதி திறந்த கண்களுடன்) அப்பாடா! என்ன அழகான பாப்பா. குஞ்சுக்காலும், குஞ்சுக் கையுமாய் எப்படிச் செக்கச் செவேல் என்று இருந்தது அது. பாழும் தூக்கம் கலையாமெ இருந்தா அந்தப் பாப்பாவையே பார்த்துண்டு இருந்திருக்கலாம், இல்லையா?

லலிதா: (சமையல் அறையில் இருந்தபடி) அடி மீனா! மீனாக் கண்ணு இன்னும் எழுந்திருக்கவில்லையே. சித்தே பாருங்களேன்.

சிவராமன்: (படுக்கை அருகில் வந்து உட்கார்ந்து) மீனாக்ஷி! எழுந்திரும்மா! சூரியன் உதிச்சு எவ்வளவு நாழி ஆயிடுத்து பார்.

மீ: (வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து தகப்பனாரின் கழுத்தைக் கட்டிக்கொண்டு) அப்பா! நான் ஒரு சொப்பனம் கண்டேனப்பா. நீ எனக்கு இன்னிக்கிக் கடையிலே பெரிய பாப்பா பொம்மை வாங்கித் தரேன்னு சொன்னா அது என்ன சொப்பனம்னு சொல்லுவேன்.

சிவ: (அவளைச் செல்லமாக அணைத்தபடி) வாங்கித்தரேன்.

லலி: (உள்ளேயிருந்து) குழந்தையோடே என்ன உங்களுக்கு? மீனா! இங்கே வாடி கண்ணே!

சிவ: மீனா! மீனா! சொப்பனத்தை எங்கிட்டேதான் மொதல்லே சொல்லணும். அப்புறம் தான் அம்மாகிட்டே. தெரிஞ்சுதா?

லலி: மீனாவா சொப்பனம் கண்டாள்? என்னவாம்? (வெளியே வருகிறாள்.)

மீ: (சாவகாசமாகப் பெற்றோர் முன்பு உட்கார்ந்துகொள்கிறாள்) அம்மா! எல்லா வீட்டிலேயும் அம்பி, அங்கச்சின்னு இருக்காளே. நமக்கு ஒத்தரும் இல்லையேன்னு நெனச்சுப்பேன். நேத்து ராத்திரி நம் வீட்டிலே ஒரு சின்னத் தொட்டிலிலே குழந்தை ஒண்ணு படுத்துண்டு விளையாடிண்டு இருந்தது.

அதன் கையும் காலும் முகமும் ரோஜாப் பூவைப்போல் இருந்தது அம்மா. (சிறுமி ஆச்சரியத்துடன் பெற்றோரைப் பார்க்கிருள்.)

லலி: (கண்களில் நீர் துளிக்க) ஒனக்கு இதெல்லாம் எப்படியடி தெரியறது?

சிவ: (சந்தோஷத்துடன்) தெரியாமெ என்ன லலிதா! வீட்டிலே தன்னோடு விளையாடத் துணை இல்லேயேன்னு குழந்தைக்குத் தெரியாதா, என்ன?

லலி: ஆமாம், எனக்குக்கூடக் குறையாகத்தான் இருக்கு. எங்க வம்சத்திலே எங்க சித்தப்பா அப்படித்தான் ஒரே பொண்ணோடே இருந்துட்டார். அப்புறம் அந்தப் பொண்ணும் போய்......

சிவ: சீ அசடே! எதுக்கு அந்தப் பழைய சங்கதி எல்லாம்?

[தெருவில் கோலம் போட்டு விட்டு வீடு கூட்டுவதற்கு வேலைக்காரி ராஜம் வந்து நிற்கிருள்.]

ராஜம்: அம்மா!

லலி: என்ன?

ரா: வெடிய நாலு நாழிக்கு ஒங்க வூட்டுக்கு வரச்சே குடுகுடுப்பைக்காரன் ஒரு சேதி சொல்லிக்கிட்டே போனன் அம்மா.

லலி: போடி போ. வேலையைக் கவனி. என்ன சொல்லிவிட்டானும் அவன்?

ரா: (சிரித்துக்கொண்டே) ஒங்களுக்கு இப்போ கோவந்தான் வரும் அம்மா. அவன் சொன்ன விஷயம் பலிச்சுதுன்ன அப்ப சொல்லுவீங்க.

லலி: (மகிழ்ச்சியுடன்) சொல்லடி ராஜம்.

ரா: இந்த வூட்டு மகாலச்சுமிக்கு ராஜா மாதிரி ஒரு ஆம்பளைக் குழந்தை பிறக்கப்போகிறதாம், அம்மா.

லலி: (வெட்கத்துடன் கணவன் பக்கம் திரும்பி) கேட்டீர்களா ராஜம் சொல்கிறதை?

சிவ: அப்படிச் சொன்னல் தானே லலிதா, நீ அவளுக்கு ஒரு பழம் புடவையானும் கொடுப்பே?

[லலிதா சிரித்துக்கொண்டே உள்ளே போகிருள். மாலை ஆறு மணிக்குச் சிவராமன் கையில் ஒரு பெரிய குழந்தைப் பொம்மையுடன் வீடு திரும்புகிருன்.]

சிவ: மீனு! மீனுக்ஷி! இங்கே வா. உனக்குப் புதுப் பாப்பா வாங்கிண்டு வந்திருக்கேன், பார்.

மீ: (சந்தோஷத்துடன் ஓடி வருகிருள்) பாப்பாவா அப்பா? அழகா இருக்கே. ஆன நிஜம் பாப்பா மாதிரி இது சிரிக்காது, அழாது; இல்லையா அப்பா? (மீனு பொம்மையுடன் தனியே போய் உட்காருகிருள்.)

மீ: (தனக்குள்) அது நிஜமான பாப்பா. அது நம்மோடு விளையாடும். இது பாவம், வைச்ச இடத்துலே பேசாமல் கிடக்கும். ஆமாம், நிஜமான பாப்பாவுக்கு நான் எங்கே போகிறது?

[இரவு ஒன்பது மணி. மீனு தூங்கிவிட்டதாகப் பெற்ருேர்கள் எண்ணுகிருர்கள்.]

லலி: ஆமாம், இந்தப் பொம்மையை எதுக்கு வாங்கினேளாம்?

சிவ: குழந்தை விளையாடத்தான்.

லலி: நாளையிலிருந்து என் பிராணனை வாங்கப் போரு அவ, குழந்தைக்குச் சட்டை தைச்சுக் கொடுன்னு.

சிவ: ஒனக்குந்தான் போதே போகாதே லலிதா. வேறே நச்சு

நச்சென்று இங்கே யார் இருக்கா?

லலி: ஊம்.. அப்படிச் சுலபமா நினைச்சுட வேண்டாம். இன்னும் ஒரு மாசம் கழிச்சா எனக்கு ஒழியவே ஒழியாதே. தெரியுமா உங்களுக்கு?

சிவ: (ஆச்சரியத்துடன்) என்ன சொல்றே லலிதா? நிஜமாவா?

லலி: 'ஒனக்கு அம்பியோ தங்கச்சியோ பிறக்கப் போறது'ன்னு சொன்னு மீனுவுக்குத் தெரியுமோ?

சிவ: தெரியாமெ என்ன? மீனு ரொம்ப சமத்தாக்கும்!

மீனு: (தனக்குள்) எனக்கு அம்பி பிறக்கப் போகிறுனுமே. இருக்கட்டும்! இந்த அடுத்த வீட்டுக் கோபு, கமலி இவாளுடைய கொட்டமெல்லாம் இனிமே அடங்கிப் போயிடும். 'ஒண்டி, சண்டி'ன்னு என்னை அந்தக் கோபு இனிமே சொல்ல மாட்டான்.

[லலிதா ஐந்தாறு மாதங்களுக்கு அப்புறம் ஓர் ஆண் குழந்தையுடன் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வருகிறுள்.]

சிவ: மீனு! மீனுக்ஷி! இங்கே வந்து பார். உன் அம்பி உன்னைப் போலவே செக்கச் செவேல்னு எத்தனை அழகா இருக்கான்னு பார்.

மீனு: (சந்தோஷம் துள்ளும் மனத்துடன்) என்னைப் போலவா இருக்கான், அப்பா?

லலி: (சற்றுப் பரிகாசத்துடன்) அவளைவிட ராஜா சிவப்பு! அவள் உங்களைப்போல மாநிறந்தான். ராஜா நல்ல எலுமிச்சம் பழம் நிறம்.

மீ: அம்பி என்னைவிட அழகாமே. அம்மாவுக்கு அம்பின்னு ஒசத்தியாகப் போய்விட்டான்?

[குழந்தையைப் பார்க்க வேலைக்காரி ராஜம் வருகிறுள்.]

மீ: ராஜம்! என்ன இப்படிப் பறக்கப் பறக்க ஓடி வரே? யாரைப் பார்க்க?

ரா: இரும்மா. புதுப் பாப்பாவைப் பாக்கத்தான் அவசர அவசரமாய் ஓடியாந்தேன். இல்லேன்னு தினம் பாக்கற உன்னையா பாக்க இவ்வளவு அவசரமா வரேன்னு நெனச்சே?

மீ: (தனக்குள்) அம்மாகூட அவ்வளவு முக்கியமாய்ப் படலலை அவளுக்கு. அம்பியைப் பாக்கன்னு அவள் ஓடி வந்திருக்கிறுள்!

[அன்று மாலை ஆபீஸிலிருந்து சிவராமன் வீடு திரும்பும்போது கையில் ஒரு பெரிய பொட்டலத்துடன் திரும்பி வருகிறுன்.]

சிவ: லலிதா! பனிக் காலமாச்சே. குழந்தைக்கு வேண்டிய

கம்பளி உடுப்பெல்லாம் வாங்கிண்டு வந்திருக்கேன்.

மீ: எனக்கு என்ன அப்பா வாங்கிண்டு வந்தே?

லலி: ஒனக்கு என்னடி தினம் வாங்கிண்டு வருவா? தினம் தினம் ஒனக்கு வாங்கித் தரமாட்டாளோ?

[குழந்தை ராஜாவின் ஆண்டு நிறைவுக்குப் பத்துத் தினங்கள் தான் இருந்தன.]

லலி: இருந்து இருந்து அபூர்வ மாய்ப் பிறந்த குழந்தை. ஜாம் ஜாம்னு பிறந்த நாளைக் கொண்டா டணும், தெரிஞ்சுதா?

சிவ: என்னத்துக்கு லலி? தலைச்சன் பெண்ணுக்கே சாதாரண மாகத்தான் செஞ்சோம். வீணுக இந்தப் பஞ்சகாலத்தில் பணத்தை விரயமாக்குவானேன்?

லலி: ஆமாம்; மீனு பிறந்தப்போ ஒங்களுக்கு என்ன சம்பளம்னு யோசனை பண்ணிப் பாருங்கோ. அறுபத்தைந்து ரூபாய். இப்போ நானூறு வறது. இவன் பிறந்தப் புறம் முன்னூறிலிருந்து நானூறு ஆயிருக்கு. குழந்தை அதிர்ஷ்டம். அவனுக்காக இருநூறு ரூபாய் செல வழிக்க மனசு வரலையே ஒங்க ளுக்கு? (கோபத்துடன் திரும்பிக் கொள்கிருள்.)

மீ: இந்த அம்பி என்ன அப்படி ஒசத்தியாப் போயிட்டான்? அம்மா வுக்கு என்னைக் கண்டாலே பிடிக் கல்லே. இந்த அம்பியாலேதான் இவ்வளவும். ராஜா பொறக்காமயே இருந்தா எவ்வளவு நன்ருயிருக்கும்!

[லலிதா தூங்கிக்கொண் டிருக் கிருள். மீனுவும், ராஜாவும் விளை யாடுகிருர்கள். குழந்தை ராஜா பொம்மையால் கையை நசுக்கிக் கொண்டு அழுகிருன்.]

லலி: (தூக்கி வாரிப் போட்ட படி எழுந்து) மீனு! குழந்தையை என்னடி செஞ்சுட்டே?

மீ: நான் ஒண்ணும் பண்ணலை அம்மா. அவனுகவே கையை நசுக்கிண்டு அழுருன்.

லலி: அடி, பாவி! குழந்தை கையிலே ரத்தம் வறதே. கிடா வாட்டம் வயசாறதே ஒனக்கு. குழந்தையைப் பாத்துக்கத் தப்பு இல்லையேடி. (மீனுவின் முதுகில் இரண்டு அறை வைக்கிருள்.)

மீ: அம்மா? ஊ... ஊ... அவன் வந்து......

லலி: ஆமாமடி துக்கிரி! அதைக் கண்டாலே ஒனக்கு ஆகலே. அருமை யாப் பொறந்தாச்சேன்னு இல்லே! ஒன் கண்ணே படும் அதுக்கு! (குழந் தையை எடுத்துக்கொண்டு கோபத் துடன் உள்ளே போகிருள்.)

[இரவு]

சிவ: மீனு என்ன இன்னிக்கிக் குஷியாக இல்லே? குழந்தையை ஏதானும் சொன்னுயா என்ன?

லலி: ஆமாம் சொன்னேன். இரண்டு அடியும் கொடுத்தேன்! வரவர, கழுதைக்குப் புத்தியே இல்லே. குழந்தை ராஜா பொம்மையால் கையை நசுக்கிண்டு அழுருன். அதைப் பாத்துண்டு நிக்கறது இந்தச் சமத்து! இதோ பாருங்கோ, விரல் நசுங்கிக் காயம் பட்டிருக்கு.

சிவ: (விரலைப் பார்த்துவிட்டு) பூ! இதுதானு பிரமாதம்? குழந்தைன்னு அடி, காயம் இல் லாமெ வளந்துடுமா, லலி? இன்னும் நடக்கச்சே தொப் தொப்புனு விழுந்து அடிபட்டுக்கொள்ளும். நாலு குழந்தைகளோடே விளை யாடச்சே அடிபடும்.

லலி: நன்றாயிருக்கே! அதுக் குன்னு காலேயும் கையையும் ஒடிச் சுண்டு நிக்கணுமா?

சிவ: காலே ஒடிச்சுக்கணும்னு சொல்லவில்லே. அதுக்காகப் பெரிய குழந்தையை அளவுக்கு மீறி, கண்டிக்காதேன்னுதான் சொல்ல வந்தேன்.

லலி: நீங்க செல்லம் கொடுத்துத் தான் மீனு கெட்டுப் போனு!

[காலே]

லலி: (ராஜாவைத் தொட்டுப் பார்த்து) ஒடம்பு நெருப்பாக் கொதிக்கறதே. நல்ல ஜுரம்!

சிவ: ஜுரமா?

மீ: (தனக்குள்) நன்னு ஜுரம் வரணும். இவனுலேதானே என் னைக் கண்டால் அம்மாவுக்குப் பிடிக் காமல் போயிடுத்து?

லலி: குழந்தைக்குப் பிறந்தநாள் கொண்டாடணும்னு எவ்வளவோ ஆசையா இருந்தேனே. குழந்தை கண்ணை முழிக்காமெ இருக்கானே. (கண்களில் நீர் தளும்ப உட்கார்ந் திருக்கிருள்.)

[டாக்டர் வருகிருர்.]

லலி: டாக்டர்! குழந்தைக்கு ஒண்ணும் பயமில்லேயே?

டாக்: கபம் நிறைய இருக்கிறது. ஜுரவேகமும் அதிகம். இருந்

தாலும் பகவானை நம்பி வைத்தியம் செய்யலாம். கவலைப்படாதீர்கள்.

மீ: (கவலையுடன்) ஸ்வாமி, பகவானே! என்னுடைய பொறுமையால்தானே ராஜா இப்படிப் படுத்துண்டு இருக்கான்? அம்மா சொன்னமாதிரி என் கண் தான் அம்பிக்குப் பட்டுடுத்து.

சிவ: லலி! வீணா என் கவலைப் படறே?

மீ: (கண்களில் நீர் பெருக) என்னால்தான் அப்பா, ராஜாவுக்கு உடம்புக்கு வந்துடுத்து. அவனுக்கு ஜுரம் வந்திருக்குன்னு அம்மா சொன்னதும், 'நன்னா வேணும்'னு நெனச்சுண்டேன். (அழுகிறாள்.)

சிவ: அதனாலே ஒண்ணும் பாதகமில்லே, மீனு. டாக்டர் நல்ல மருந்தாக் கொடுத்துச் சரிபண்ணிடுவார். ஸ்வாமியை வேண்டிக்கோ.

[மறுநாளும் டாக்டர் வருகிறார்.]

லலி: (கவலையுடன்) குழந்தை எப்படி இருக்கான், டாக்டர்?

டாக்: நேற்றைவிடப் பரவாயில்லே, அம்மா. பயப்படாதீர்கள். படிப்படியாய் ஜுரம் இறங்கிவிடும். இன்னும் நாலைந்து நாளில் சரியாகிவிடும்.

லலி: அவனுக்குப் பிறந்த நாள் வருகிறது.

டாக்: வந்து விட்டுப் போகட்டும். குழந்தை பிழைத்து எழுந்திருந்தால் அதுவே பிறந்த நாள் கொண்டாடின மாதிரி அம்மா. (போகிறார்.)

சிவ: மீனுவைவிட இவனை நீ ஒசத்தியாகப் பாவிச்சே, லலி. அவனுக்குப் பிறந்தநாள் பிரபலமாகக் கொண்டாட வேண்டாம்னு சொன்னேன்.

லலி: என்மேலே தவறெல்லாம் இருக்கு. குழந்தை மீனுவை நான் கவனிக்கவேயில்லே.

மீ: என் மேலேதான் தப்பு அம்மா. (தாயாரை ஓடிக் கட்டிக் கொள்கிறாள்.)

சிவ: குழந்தைக்கு உடம்பு சரியானால் போதும் லலிதா. அனாவசியமான சலுகை, ஏற்றத்தாழ்வு - இதுகளுக்கெல்லாம் உன்னுடைய புனிதமான தாயுள்ளத்தில் இடங்கொடாதே.

லலி: பகவான் எனக்கு அந்த மாதிரியான உயர்ந்த எண்ணங்களையே தரட்டும். (கண்ணை மூடி, ஸ்வாமியைப் பிரார்த்திக்கிறாள்.)

மீ: என் அம்பியைப் பார்த்து நான் பொறாமைப்படாமல் இருக்கணும், ஸ்வாமி. (ஸ்வாமி படத்தருகில் சென்று வணங்குகிறாள்.)

[திரை]

வாத்தியார்: அகத்திய முனிவர் ஏழு கடலை அப்படியே உண்டார்!

ராமு: இதென்ன பிரமாதம், ஸார்! அவர் ஏழு கடலைதானே உண்டார். நான் ஐம்பது கடலை உண்பேன், ஸார்!

நாகசுந்தரி

எஸ். வி. ரமணி

'டக்டக்..டக டக..கட..கட கட் கட்' என்று குதிரைக் குளம்பொலி கேட்டது. குதிரையின்மேல் எறிவந்த அரசன் சாவகனுடைய முகம் கவலையாலும் அசதியாலும் வாடியிருந்தது. அவனுக்கு ஐம்பது வயசிருக்கும். பல நாடுகளைப் படையெடுத்தச் சென்று வீரச் சாவகன் என்று பிரக்கியாதி பெற்றவன். அந்திம காலம் நெருங்க நெருங்க அவனையும் அவன் பட்டத்து ராணியையும் பிள்ளையில்லாக் குறை வருத்திக்கொண்டேயிருந்தது.

ஒரு சமயம் சாவகன் படைத் துணையின்றிப் பல தேசங்களைச் சுற்றிவிட்டுத் தனியாகக் காட்டின் வழியே தன் தலைநகருக்குத் திரும்பிக்கொண்டிருந்தான். அவன் நகரை விட்டுக் கிளம்பிப் பத்து மாதங்கள் போலாகிவிட்டன. நல்ல உச்சிவேளைப்போதில் சாவகன் காட்டின் மத்தியிலே ஒரு குளிர்ச்சி பொருந்திய நீர்ச்சுனையைக் கண்டு, குதிரையை நிறுத்திவிட்டு இறங்கினான். அந்தச் சுனை நீரைக் குடித்து, தாகத்தைத் தணித்துக்கொண்

டான். கரையேறும்போது அவன் கால்களை யாரோ கௌவிப் பிடித்திருப்பதுபோல் இருந்தது.

சாவகன் அந்த இரும்புப் பிடியிலிருந்து தன்னை மீட்டுக்கொள்ள ஆனவரையில் போராடினான். முடிந்தால்தானே? சாவகன் சுனையை உற்றுக் கவனித்தான். அவன் கண்கள் நிலைத்துப்போயின. தண்ணீருள்ளே ஒரு பயங்கரமான முகம் தெரிந்தது. கோரமான பற்களைக் காட்டி அந்த முகம் நகைத்தது. காதுவரை அகன்ற பெரிய வாய்; சிங்கத்தின் விழிகள்; கிடுக்கியைப் போன்ற இரும்புக் கரங்கள்.

"சாவகா! உன்னால் இந்த இடத்தைவிட்டு அசைய முடியாது! அரண்மனையில் இப்போது ஒன்று இருக்கிறது. அது உனக்குத் தெரியாது. அதைத் தருகிறேன் என்று சத்தியம் செய்தால் நான் உன்னை விட்டுவிடுவேன்" என்றது அந்த ராக்ஷஸ உருவம்.

"சரி; எனக்குத் தெரியாதது என் அரண்மனையில் எது இருந்தாலும் அதை நீ விரும்பிக் கேட்கும்போது தருகிறேன்" என்று சத்தியம் செய்தான் சாவகன்.

"நிச்சயந்தானா?"

"நிச்சயந்தான்; காலை விடு!"

அடுத்த கணம் அவன் விடுதலையடைந்தான். அவனைப் பிடித்திருந்த ராக்ஷஸன் மாயமாய் மறைந்து போனான்.

சாவகன் புறப்பட்டுத் தலைநகருக்கு வந்தான். எங்கும் ஒரே ஆர்ப்பாட்டமாக இருந்தது. அரண்மனைக்குச் சென்றதும் தான் விஷயம் காதில் விழுந்தது. பத்து நாட்களுக்கு முன் அவனுக்கு அழகும் பிரகாசமும் பொருந்திய அருமைக் குமாரன் ஒருவன் பிறந்திருந்தான். அவன் அடைந்த ஆனந்தத்தில் எல்லாவற்றையும் மறந்துபோனான். ஆனால் சாவகாசமாக அந்த ராக்ஷஸனிடம் சத்தியம் செய்து கொடுத்ததை எண்ணியதும் அவன் ஆனந்தமெல்லாம் பறந்து போயிற்று. இரவும் பகலும் அவனும் ராணியும் தங்கள் அருமை மகனை ஒருநாள் இழக்க நேரிடும் என்று எண்ணி எண்ணி வருந்தினார்கள்.

காலம் போய்க்கொண்டு இருந்தது. ராஜகுமாரன் கிரீஷ்மகேது நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தான். எல்லாக் கலைகளையும் கற்றுத் தேர்ந்து, அழகிய இளைஞனாக அவன் மாறிவந்தான். இப்படிப் பல வருஷங்கள் ஆகிவிடவே சாவகனும் அவன் மனைவியும் தம் கவலைகளையும் பயத்தையும் அடியோடு மறந்து விட்டார்கள்.

ஒருநாள் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான் கிரீஷ்மன். தற்செயலாக அவன் பரிவாரங்கள் அவனை விட்டுப் பிரிந்து வெகுதூரம் சென்றுவிட்டன. எங்கெல்லாமோ கிரீஷ்மன் சுற்றிச் சுற்றி அலைந்து விட்டுக் கடைசியாகச் சாவகன் முன்பு தண்ணீர் குடித்த நீர்ச் சுனைக்கு வந்து சேர்ந்தான்.

திடீரென்று யாரோ அவனை அழைத்தார்கள்: "ராஜகுமாரா! உனக்காக நான் எவ்வளவு நாள் காத்திருக்கிறேன், தெரியுமா?"

கிரீஷ்மன் சுற்றிச் சுற்றிப் பார்த்துவிட்டு, "யார் நீ? எங்கேயிருந்து பேசுகிறாய்?" என்றான்.

"உன் தந்தையைக் கேட்டால் நான் யாரென்று தெரியும். என் கடனை நான் உடனே எதிர்பார்ப்பதாக உன் தந்தையிடம் போய்ச்

சொல்!'' என்று மலைபோலப் படுத்திருந்த அந்த ராக்ஷஸன் கூறினான்.

கிரீஷ்மன் அரண்மனைக்குத் திரும்பி வந்தான். சுனையில் நடந்தவற்றைச் சொன்னதும் சாவகன் சோகத்தினால் கீழே விழுந்தான். பிறகு சோகம் தெளிந்தது. "குழந்தாய்! நாங்கள் பயந்தது நடந்துவிட்டது. நீ அந்த ராக்ஷஸனிடம் போகவேண்டும்'' என்று எல்லா விவரங்களையும் நடந்தது நடந்தபடியே சொன்னான்.

கிரீஷ்மன் பெற்றோர்களைத் தேற்றி, "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம். நான் எப்படியும் திரும்பி வருவேன்'' என்றான். தந்தை கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காக அவன் தங்கச் சேணம் அணிந்த அழகான குதிரை ஒன்றின்மேல் ஏறி வைர வாளையும் கேடயத்தையும் அணிந்துகொண்டு தன்னந் தனியே நீர்ச்சுனையை நோக்கிப் புறப்பட்டான்.

அவன் போய்ச் சேர்ந்த நேரம் இன்பமயமான மாலை நேரம். அந்த நீர்ச்சுனை யருகில் இருந்த தடாகத்தில் இருபது முப்பது நாககன்னிகைகள் தம் பகட்டான மேல் ஆடைகளைக் கரையில் வைத்துவிட்டு நீராடிக்கொண் டிருந்தார்கள். கிரீஷ்மனை அவர்கள் கவனிக்கவில்லை. அவன் விளையாட்டுத்தனமாக ஒருத்தியினுடைய ஆடைகளை எடுத்து வைத்துக்கொண்டு ஒரு புதருக்கடியில் மறைந்து வேடிக்கை பார்த்தான்.

எல்லாரும் கரையேறினர். தம் தம் மேல் ஆடைகளை அணிந்துகொண்டு விர்ரென்று மறைந்து சென்றனர்.

ஆனால் அவனிடமிருந்த ஆடைகளுக்குரியவள் மட்டும் தயங்கித் தயங்கி நின்றாள். கடைசியாகக் கிரீஷ்மன் வெளிப்பட்டதும் அவள் மிகவும் தயவாகத் தன் ஆடைகளைத் தந்துவிடும்படி கேட்டு வாங்கிக் கொண்டாள்.

"ராஜகுமாரா! ஆடைகளைத் திருப்பிக் கொடுத்ததற்கு என் நன்றி. நான் அந்த நாகலோகத்தின்

ராக்ஷஸ மாயாவியின் கடைசிப் பெண். என் தந்தை உன்னைத்தான் வெகுநாளாக எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறார். அங்கே நான் உன்னை அழைத்துப் போகிறேன். புறப்படலாமா?'' என்றாள்.

கிரீஷ்மனுக்கு அவளிடம் நம்பிக்கையும் அன்பும் உண்டாயிற்று. ''சரி; போகலாம். ஆனால் உன் பெயர் என்ன?'' என்றான்.

''நாகசுந்தரி.''

நாகசுந்தரி பூமியின் ஓரிடத்தில் கால்களால் தட்டினாள். பூமி மெல்லப் பிளந்துகொண்டது. அங்கே நவரத்தினக் கற்களால் ஆன பெரிய குகையின் வாய் தெரிந்தது. அதனுள் படிக்கட்டுகள் இருந்தன. நாகசுந்தரி முன்னே செல்ல, கிரீஷ்மன் பின்தொடர்ந்தான். அவளுடைய சுவர்ணமயமான உடலும் ஒளிபொருந்திய முகமும் அந்த இருண்ட பாதைக்கே ஒரு பிரகாசத்தைக் கொடுத்தன.

நாகசுந்தரி அவனைப் பல மாடங்களையும் கூடங்களையும் தாண்டி அழைத்துச் சென்றாள். ''பகல் இரவு எந்த நேரமும் இந்த லோகம் இப்படித்தான் இருக்கும். இங்கே தரையெல்லாமே வைர மணிகளால் ஆனது!'' என்றாள் நாகசுந்தரி.

பேசிக்கொண்டே ராக்ஷஸனின் கொலு மண்டபத்தை அடைந்தார்கள். நாகசுந்தரி வெளியிலேயே நின்றுகொண்டு, ''இனி நீ மட்டும் உள்ளே போ. நான் வரக்கூடாது. எதற்கும் பயப்படவேண்டாம்; நான் இருக்கிறேன். என் தந்தை மகா பொல்லாதவர். அவர் உருவத்தைப் பார்த்தாலே சர்வநாடியும் ஒடுங்கிப்போகும். ஆனால் பயந்தாயோ, எல்லாம் போச்சு!'' என்று சொல்லி நாகசுந்தரி மறைந்துபோனாள்.

கிரீஷ்மனைக் கண்டதும் ராக்ஷஸன் கடகடவென்று சப்தலோகங்களும் நடுங்கும்படி சிரித்தான். ''ஏய் மானிடப்பதரே - வா வா! உன்னைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்'' என்று கர்ஜித்தான்.

நாகசுந்தரி சொன்ன வார்த்தைகளை எண்ணிக்கொண்டு, ''அதற்குத்தான் நானும் வந்திருக்கிறேன்'' என்று நெஞ்சைப் புடைத்துக் கொண்டு கம்பீரமாகப் பதில் அளித்தான் அவன்.

''கிரீஷ்மா! நீ தைரியசாலிதான்!'' என்றான் மாயாவி.

''இருக்கலாம்!'' என்றான் கிரீஷ்மன்.

''ஆனாலும் நீ வெகுநாளாக இங்கு வராமல் என்னைக் காத்திருக்கச் செய்துவிட்டாய். ஆகவே நீ பொழுது விடிவதற்குள் ஒரு சலவைக்கல் மாளிகையும் அதில் நவரத்தின மணிமண்டபமும் கட்டி

முடிக்கவேண்டும். இல்லேயோ, உன் தலை தரையில் உருண்டுவிடும்'' என்று கட்டளையிட்டான்.

கிரீஷ்மன் தன் இருப்பிடத்துக்குப் போய், கவலையுடன் உட்கார்ந்திருக்கும்போது மெல்ல ஒருவரும் அறியாமல் நாகசுந்தரி ஒரு வண்டைப் போலப் பறந்து வந்து அவன் அறையினுள் பிரவேசித்தாள்.

"என்ன வருத்தப்படுகிருய்?"

"வருத்தப்படாமல் எப்படிச் சிரிப்பதாம்? உன் அப்பாவின் விசித்திரமான உத்தரவைக் கேட்டாயோ, இல்லேயோ!"

"பூ! இது என்ன பிரமாதம்? நீங்கள் சொஸ்தமாகத் தூங்குங்கள். எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்ருள்.

காலையில் அவன் எழுந்து வெளியே பார்த்தான். என்ன ஆச்சரியம்! தகதகவென்று கண்ணேப் பறிக்கும் அற்புத மாளிகை ஒன்று சலவைக் கல்லாலும் ரத்தின முகப்பாலும் ஓங்கி வளர்ந்து நின்றது.

மாயாவி இதைக் கண்டு, "பேஷ் பேஷ்! நீயும் பெரிய ஆள்தான்! நாளைக்கு என்னுடைய இருபத்தேழு குமாரிகளேயும் வரிசையாக நிறுத்தி வைக்கப்போகிறேன். அவைகளில் கடைசிப் பெண்ணை நாகசுந்தரி யார் என்று நீ கண்டுபிடிக்க வேண்டும். இல்லேயோ, உன் தலை நிலத்தில் உருண்டுவிடும்'' என்ருன்.

நாகசுந்தரி வந்ததும், "உன்னைக் கண்டுபிடிப்பது ஒரு பிரமாதமா?'' என்ருன் கிரீஷ்மன்.

"பிரமாதமா? அதைவிடக் கஷ்டம் வேறு ஒன்றுமேயில்லே. ஏனென்ருல் நாங்கள் இருபத்தேழு பேரும் ஒரேமாதிரியாக இருப்போம். கொஞ்சங்கூட வித்தியாசம் தெரியாது. நிறம், உயரம் எல்லாம்!'' என்ருள் நாகசுந்தரி.

"அப்படியாளுல் நான் எப்படி உன்னேக் கண்டுபிடிப்பது?''

"என் முகத்தில் ஓர் ஈ உட்கார்ந்திருக்கும். அதைப்பார்த்துக் கண்டு பிடியுங்கள்!'' என்று ஓர் உபாயம் சொல்லிக்கொடுத்தாள்.

மறுநாள் இருபத்தேழு நாக கன்னிகைகளும் வரிசையாக நின்ருர்கள். இருபத்தேழு தாரகைகளைப் போல அவர்கள் அழகாய் விளங்கினுர்கள். ஒருவருக்கொருவர் வித்தியாசமே தெரியவில்லே. கிரீஷ்மன் இரண்டு முறை அப்படியும் இப்படி



யும் போய் வந்தான். ஒருத்தியின் முகத்தில் மட்டும் ஓர் ஈ வட்டமிட்டு நின்றது. கிரீஷ்மன் உடனே அவள் கையைப் பிடித்து, "இதோ இவள் தான்!" என்று முன்னே கொண்டுவந்து நிறுத்தினன்.

ராக்ஷஸன் பிரமித்துப் போனுன். 'சரி; என் எதிரிலேயே ஓர் ஊது பத்தியைக் கொளுத்தி, அது எரியு முன்பாக நீ ஒரு சின்ன இறக்கை விமானம் செய்யவேண்டும்" என்று கட்டளேயிட்டான்.

அன்று இரவு நாகசுந்தரி, "இந்தத் தடவை உங்களால் என் தந்தையின் கட்டளையை நிறைவேற்ற முடியாது. நாம் உடனே தப்பிச் சென்றுவிடுவோம்" என்ருள்.

கிரீஷ்மனுச்கும் அதுதான் சரி என்று பட்டது. "என் குதிரை.."

"அந்த நீர்ச்சுனையருகில் மேய்ந்து கொண்டிருக்கும்! நாம் பொழுது விடிவதற்குள் அங்கே போய்விட வேண்டும். நம்மை இங்கே காணுமல் தேட ஆரம்பிப்பார்கள். இப்பொழுது கூட உங்களை ஒரு கிளியாக மாற்றித் தான் வெளியே கொண்டு போகப் போகிறேன்" என்ருள் நாகசுந்தரி.

அழகான பச்சைக்கிளியாக மாறினன் கிரீஷ்மன். விடியும் சமயத்துக்கு அவர்கள் நீர்ச்சுனையை அடைந்தார்கள். குதிரை நீர்ச்சுனேக் கருகிலேயே மேய்ந்து திரிந்து கொண்டிருந்தது.

கிளி கிரீஷ்மனுகியது. கிரீஷ்மன் நாகசுந்தரியைக் குதிரையில் அழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

கொஞ்ச தூரம் கூடப் போயிருக்க மாட்டார்கள். "பின்னுல் யாரோ நம்மைத் துரத்திக்கொண்டு வருகிருர்கள் போல் இருக்கிறதே!" என்ருள் நாகசுந்தரி.

அவள் சொன்னது உண்மைதான். ராக்ஷஸன் தன் ஆட்களை ஏவி அவர்களைத் துரத்திப் பிடித்து வரும்படி கட்டளையிட்டிருந்தான்.

நாகசுந்தரி உடனே அவனை ஒரு புருவாக மாற்றிவிட்டுத் தன்னையும ஒரு பேடையாக மாற்றிக்கொண்டாள். குதிரை ஒரு மரமாகிவிட்டது.

ராக்ஷஸனுடைய ஆட்கள் சமீபித்து வந்தார்கள். கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலும் யாரையும் காணுமல் அவர்கள் வந்த வழியே திரும்பிப்போனுர்கள்.

இப்படி இரண்டு தடவை ராக்ஷஸனுடைய ஆட்கள் அவர்களைத் துரத்தி வருவதும் அவள் மாயமாக உருவத்தை மாற்றிக் கொண்டு அவர்களை ஏமாற்றி அனுப்புவதுமாக நடந்தன.

இரவாயிற்று. கடைசியாக ராக்ஷஸனே வருகிருன் என்பதை நாகசுந்தரி அறிந்துகொண்டாள். அந்த இடத்தில் சாலே இரண்டாகப் பிரிந்திருந்தது. ஒன்று கிரீஷ்மனுடைய தேசத்துச்குப் போகும் பாதை; மற்ருென்று வேறு தேசத்துக்குப் போவது. ஆகவே அவள் கிரீஷ்மனைப் பார்த்து, "நாம் வேறு பாதையில் போவோம். என் தந்தை உங்கள் தேசத்துக்குப் போய் ஏமாந்துபோகட்டும்" என்ருள்.

"சரி; உன் இஷ்டம்."

ராக்ஷஸனுடைய கோர கர்ஜனை அவர்கள் எதிர்பார்த்தபடியே வேறு பாதையில் சென்று மங்கி மறைந்தது.

வெகுதூரம் போனதும் அந்த நாட்டின் எல்லையை அடைந்தார்கள். அங்கே இருந்த ஒரு பெரிய முரடன் அவர்களைத் தடுத்தான். உடனே கிரீஷ்மன் தன்

வைரவாளை ஓங்கினான். போர் மிக உக்கிரமாய் நடந்தது. பொழுது விடியும் சமயத்தில் அந்த முரடன் குருதி வெள்ளத்தில் வீழ்ந்தான். அந்தத் தேசத்து ஜனங்கள் உடனே கிரீஷ்மனை எதிர்கொண்டழைத்து, "நீங்களே இன்று முதல் எங்கள் அரசராக முடிசூட்டிக் கொள்ளவேண்டும்" என்றார்கள்.

நாகசுந்தரி ஆனவரையில் தடுத்தாள். அந்தத் தேசத்துக்குள் போனால் அவர்கள் திரும்ப முடியாது என்று வாதாடினாள்.

"ஒரு நாளும் அப்படி நடக்கவிட மாட்டேன். நீ சும்மா வா!" என்றான் கிரீஷ்மன்.

"நான் இங்கேயே எல்லைக் கல்லாக இருக்கிறேன். நீங்கள் திரும்பி வரும்வரையில் அங்கே ஒரு வாய் அன்னங்கூடச் சாப்பிடாதீர்கள். சாப்பிட்டால் என்னை மறந்துவிடுவீர்கள்!" என்றாள் நாகசுந்தரி.

"சரி; சாப்பிடவில்லை" என்று கிரீஷ்மன் நகருக்குள் சென்றான்.

அன்று பகல் கழிந்தது. கிரீஷ்மன் தன் வாக்கை மறந்துவிட்டான். பசியில் அவனுக்கு ஒன்றுமே ஞாபகமில்லை. அறுசுவை உண்டி வந்தது. அவன் அதை எடுத்து வயிறார உண்டான். நாகசுந்தரியின் நினைவு அடியோடு அவன் நெஞ்சிலிருந்து அகன்றுவிட்டது.

ஒரு வாரம் ஆயிற்று; ஒரு மாதம் ஆயிற்று. நாகசுந்தரி எவ்வளவு நாள் தான் மைல் கல்லாக இருப்பது? அன்று அவள் ஒரு வெண்புறுவாக மாறி நகருக்குள் சென்றாள். அரசன் கிரீஷ்மகேதுவுக்கு விவாசம் நடக்கப்போகிறது என்று ஜனங்கள் பேசிக்கொள்வதிலிருந்து தெரிந்துகொண்டாள்.

ஒரு குறிகாரக் குறத்தியைப் போல உருமாறி அரண்மனை அந்தப்புரத்தினுள் நுழைந்தாள்.

அவளுடைய வேடிக்கையான பாட்டையும் ஆட்டத்தையும் கண்டு கிரீஷ்மன், "ஏ குறத்தி! எப்படி இங்கே வந்தாய்? உன்னை யார் உள்ளே விட்டது?" என்றான்.

"ராஜகுமாரா! உங்கள் தேசத்தில் கல்லெல்லாம் வாயைத் திறந்து பேசுகிறது. நான்மட்டும் உள்ளே வருவதா பிரமாதம்?" என்றாள்.

"கல் பேசுகிறதா?"

"ஆமாம்; ராஜா, ஆமாம்."

"எங்கே? அதை எனக்குக் காட்டுவாயா?"

"இப்பொழுதே வந்தால் காட்டுகிறேன்!" என்றாள் நாகசுந்தரி.

"சரி, புறப்படு!"

"அந்தக் கல் என்ன சொல்லிற்று தெரியுமா? 'நம் தேசத்து ராஜா நம்பினவளைக் கைவிட்டவர். அவரை ஏன் பார்க்கப் போகிறாய்?' என்று கேட்டது! அப்படித்தானா?" என்றாள் குறத்தி.

கிரீஷ்மனுடைய கண்கள் அப்போதுதான் திறந்தன. "ஆகா, நாகசுந்தரி! நான் எவ்வளவு நன்றி கெட்டவன்!" என்று கதறினான்.

குறத்தி கலகலவென்று சிரித்தாள். அடுத்த கணம் நாகசுந்தரி அவன் எதிரிலே நின்றாள்.

அதே மணப் பந்தலில் அவனுக்கும் நாகசுந்தரிக்கும் கல்யாணம் ஜாம் ஜாம் என்று நடந்தது. கல்யாணத்துக்குச் சாவகனும் கிரீஷ்மனின் தாயும் வந்திருந்தார்கள். நாகசுந்தரியின் தந்தையிடமிருந்து கூட விந்தை விந்தையான பொருள்கள் சீதனமாக வந்திருந்தன. என்ன இருந்தாலும் அவள் அவனுடைய கடைசி அருமைப் பெண் அல்லவா?

எண்ணிலே படங்கள்

'மூட்டை'

(1 முதல் 9 வரை)



கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(A)142. அப்துல்ரஹீம், N., குறிஞ்சிப்பாடி. 143. ஆதப்பன், K. R., சிவகங்கை. 144. அனந்த கிருஷ்ணன், P., சேலம் டவுன். 145. அருணஜடை, S., மடப்புரம். 146. அற்புதம், K., விக்கிரமசிங்கபுரம். 147. அப்துல் ரஷீத், M., ஈரோடு. 148. அரவிந்தர், கோவிந்தாச்சாரி, R., கோயம்புத்தூர். 149. அபுசாலிமீர், M., நாகூர். 151. அண்ணாமலை, T., குடியாத்தம். 152. அப்தல் ரஹீம், M., குறிஞ்சிப்பாடி. 153. அழகப்பன், C. T., ஓ. சிறுவயல். 154. அமீர்க்கான், V., பெண்ணாடம். 155. ஆறுமுகம், O. S., மோகனூர். 156. அப்புஜம்மாள், N., நாகர்கோயில். 157. அண்ணாமலை, R. L., செகந்தராபாத். 158. அப்துல், K., ஆர்க்காடு. 159. அருணாசலம், T. N., தாரமங்கலம். 160. ஆண்டாள், லக்ஷ்மிநாராயணன், M., மேட்டுப்பாளையம். 161. அருள்சாமி., S., மண்டபம் காம்ப். 162. அப்துல் லத்திப், M., மேட்டுப்பாளையம். 164. அம்புஜம், சந்திரா, N., தென்காசி. 165. அனந்தநாராயணன், J., முடிகொண்டான். 166. அஞ்சனதேவி, T. S., பெங்களூர் கண்டோன்மெண்ட். 167. அருவா செட்டி, K. T., நீயூலிப். 168. அப்பா செட்டி, K. C., பௌரிங் பேட்டை. 169. அலி அகமத் T. M. J., இளையாங்குடி. 170. அழகப்பன், V. S., பருத்தித்துறை. 171. அப்தல் ஜலில், கொழும்பு. 172. அல்லாப்பிச்சை, M., இளையாங்குடி. 173. அருணாசலம், P., தாரமங்கலம். 174. அருணாசலம், K. G., நாமக்கல். 175. ஆலியா பானு, T. S, கீழக்கரை. 176. அனந்த கிருஷ்ணன் P. K., பம்பாய் - 25. 177. அப்துல், K., கடலூர். 178. அடைக்கலம், S., புதுக்கோட்டை. 179. அனந்த கிருஷ்ணன், P., சேலம். 180. அண்ணாமலை, S., அவளூர்ப்பேட்டை. 181. ஆறுமுகம், K., சென்னை-17. 182. அப்பேஸ் மியா, பாபுஜி, M., பணகுடி. 183. அப்துல் அஜீஸ், கருப்பூர். 184. அப்துல்லா, M. A., திருவள்ளூர். 185. ஆனந்தன், S., போத்தனூர். 186. அன்மரி பிலிப், A., சுங்கை பட்டணம். 187. ஆறுமுகம், A. R., முசிரி. 188. அலமேலு, சாமிநாதன், N., சிதம்பரம். 189. ஆவுடையப்பன், M., ஸ்ரீவைகுண்டம். 190. அருணா, ஜயராம், புது டில்லி. 191. அனந்த நாராயணன் R., வீரவநல்லூர்.

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி..........................

(தேதி, மாதம், வருஷம்)

ஜூன் '51 கூபன் நெ:

192. ஆனந்தி, S., சென்னை-4. 193. அன்னபூர்ணி, காசிவிசுவநாதன், V., உசிலம்பட்டி. 194. அப்துல் ஜாபர் ராவுத்தர், G.K., ஆர்க்காடு.

(B) 120. பாலசுப்பிரமணியம், M., கொழும்பு. 121. பக்தவத்ஸலம், T. P., திருச்செங்கோடு. 122. பாப்புலு, லக்ஷ்மணன், P., சென்னை. 123. பாலசுப்பிரமணியன், M. S., லால்குடி. 124. பாலசுப்பிரமணியன், P., ஈரோடு. 125. பானுமதி, N. N., நஞ்சகௌண்டர்பாளையம். 126. பாலசுப்பிரமணியன், K. R., சென்னை - 2. 127. பாலன், A., மதுரை. 128. பவாநந்தன், D. S., உறையூர். 130. பாலசுப்பிரமணியன், S. K., ஸ்ரீவைகுண்டம். 131. பாலகிருஷ்ணன், மீனாக்ஷிசுந்தரம், பாலு, L., கோயம்புத்தூர். 132. பேபி சரோஜா, ராணி, P., சென்னை-2. 133. பக்ருதீன், P. S., கொழும்பு-2. 134. பாலன், A., தாரமங்கலம். 135. பாலசந்திரன், C., கொழும்பு. 136. பரத்குமார், R., பெங்களூர் கண்டோன்மெண்ட். 137. பாலசுப்பிரமணியன், A. P., ஆத்துப்பொள்ளாச்சி. 138. பாலகிருஷ்ணன், P., திருநெல்வேலி. 139. பாலசுப்பிரமணியன், K. K., சத்தியமங்கலம். 140. பாலகிருஷ்ணன், N. K., சென்னை-8. 141. பாலகிருஷ்ணன், E. M., கோயம்புத்தூர். 142. பாலு, J., வலங்கைமான். 143. பாலகிருஷ்ணன், C., சேலம். 144. பாலசுப்பிரமணியன், N., கிச்சிப்பாளையம். 145. பாலசுப்பிரமணியன், K., சென்னை - 4. 146. பாலகிருஷ்ணன், N., பருத்தித்துறை. 147. பகவதி, ராஜலட்சுமி, G., திருவாணியாபுரம். 148. பவானி, விசுவநாதன், S., திருவிடைமருதூர். 149. பாலசண்முகநாதன், K., விருதுநகர். 150. பாலகிருஷ்ணன், A. S., திருவனந்தபுரம். 151. பாலகிருஷ்ணன், S., புதுப்பாளையம். 152. பாலசண்முகம், R., பொள்ளாச்சி. 153. பூவராகாச்சாரி, லலிதா, கிருஷ்ணமாச்சாரி, E. M., புவனகிரி. 154. பாலையன், M., திருச்சிராப்பள்ளி. 155. பாலசுப்பிரமணியன், திருச்செங்கோடு. 156. பாலசந்திரன், சந்திரசேகரன், S., மேட்டூர் அணை. 157. பாலசுப்பிரமணியன், S., கோனேரிராஜபுரம். 158. பிக்ஷேசுவரன், V. M., செங்கம். 159. பாலசுப்பிரமணியன், N., கோயம்புத்தூர்.

(C) 77. சொக்கலிங்கம், மதுரை. 78. செங்கல்வராயன், R., சென்னை - 1. 79. சந்திரசேகர், S., திருவண்ணாமலை. 80. சிதம்பரேசுவர சர்மா, M., காரைக்குடி. 81. சிதம்பரம், S., மேலப்பட்டி. 82. சந்திரசேகரன், S. R., சித்தூர்.

(மீதி அடுத்த இதழில்)

★★★★★★★★★★★★★★★

கண்ணன்

கழகம்

புதிதாகச் சேரும் அங்கத்தினர்கள் 1951-ஆம் வருஷக் கூபன்களைத்தான் அனுப்ப வேணடும். 1950-ஆம் வருஷக் கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★

பொம்மைக் கல்யாணம்

என். சோமசுந்தரம்

பாலுவும் நீலுவும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியவே மாட்டார்கள். அவ்வளவு சிநேகம். எங்கே சென்றாலும் என்ன விளையாடினாலும் இருவரும் சேர்ந்தே செல்வார்கள்; சேர்ந்தே விளையாடுவார்கள். பாலுவிடம் ஓர் அழகான பெண்பொம்மை இருந்தது. அதே மாதிரி நீலுவிடம் ஓர் அழகான ஆண் பொம்மை இருந்தது. இந்த இரண்டு பொம்மைகளுக்கும் கல்யாணம் செய்து கண்ணுக்கு அழகாய்ப் பார்ப்பது என்று இருவரும் ஒரு நாள் தீர்மானித்தார்கள்.

''வரதட்சிணை என்ன?'' என்று கேட்டாள் நீலு.

''இரண்டு சாக்லெட்! முகூர்த்தம் நாளைக்கு வைத்துக்கொள்ளலாம்'' என்றான் பாலு.

நீலுவும் சிரித்துக்கொண்டே அந்தச் சாக்லெட்டுகளை வாங்கி வாயில் போட்டுக்கொண்டாள். மறுநாள் கல்யாண ஏற்பாடுகளெல்லாம் பிரமாதமாக நடந்தன. கூடத்தில் நான்கு குத்துவிளக்குகளை ஏற்றிச் சதுரமாக வைத்தாள் நீலு. பல குழந்தைகள் இந்தப் பொம்மைக் கல்யாணத்தில் பங்கெடுத்துக் கொண்டார்கள். மொத்தத்தில் கல்யாணம் ரொம்ப அமர்க்களமாக நடந்தது. ''ரேஷன் காலமோ இல்லையோ, அதனால் விருந்து வைக்க முடியவில்லை'' என்று சொல்லிக்கொண்டே பாலு எல்லாருக்கும் காராமணிப் பப்ரமெண்ட் வழங்கினான்.

கல்யாணமானதும், ''பாலு, பாலு! உன் பொம்மை என்னுடைய நாட்டுப்பெண்ணாகி விட்டாள். இனிமேல் அவள் எனக்குத்தான் சொந்தம்'' என்று சொல்லிக்கொண்டே தன் பொம்மையுடன் பாலுவின் பொம்மையையும் சேர்த்து எடுத்துக்கொண்டு ஓடிவிட்டாள் நீலு. பாலு அழ ஆரம்பித்துவிட்டான். நீலு இப்படிச் செய்வாள்

என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை. என்னவோ விளையாட்டுக்காகக் கல்யாணம் பண்ணிவிட்டு, அப்புறம் அவரவர்கள் பொம்மையை அவரவர்கள் எடுத்துக்கொள்ளலாம் என்று அவன் நினைத்துக்கொண்டிருந்தான். கடைசியில், இப்படியா செய்வாள் நீலு?

"உன்னுடைய பெண் இனிமேல் என்னுடைய வீட்டில் வாழவேண்டியதுதானே? அதனால் நான் உன்னுடைய பொம்மையைக் கொடுக்கவே மாட்டேன்" என்று நீலு பிடிவாதம் பிடித்தாள்.

"ஆகட்டும் பார்க்கலாம்!" என்று ஏதோ தீர்மானத்துக்கு வந்தவனாய் முணுமுணுத்தான் பாலு.

ஒரு வாரமாயிற்று. பாலு, நீலுவை மெள்ள நெருங்கி, "நீலு, நீலு! நாம் தலை தீபாவளி விளையாட்டு விளையாடலாமா? தையற்கடையிலிருந்து ரொம்ப அழகான துணிகளையெல்லாம் கொண்டுவந்து வைத்திருக்கிறேன். அப்பா வேறே எனக்குக் கற்கண்டு, சாக்லெட் எல்லாம் வாங்கிவந்து கொடுத்திருக்கிறார். நீ மாப்பிள்ளையையும் பெண்ணையும் தலை தீபாவளிக்காக என் வீட்டுக்கு அனுப்பி வைப்பாயாம். நான் இரண்டு பொம்மைகளுக்கும் எண்ணெய் ஸ்நானம் செய்துவைத்து, புதுப் புதுத் துணியெல்லாம் கட்டி, உனக்கும் பட்டாஸ், கற்கண்டு, சாக்லெட் எல்லாம் கொடுப்பேனாம். ஜோராக இருக்கும் இல்லே? என்ன விளையாடலாமா?" என்று கேட்டான் பாலு.

நீலுவுக்கும் ஆசையாகத்தான் இருந்தது. ஆனால் அவள், "நீ கல்யாணத்தின்போது அழுததுமாதிரி அழக்கூடாது. என்ன தெரியுமா?" என்று நிபந்தனை போட்டாள் நீலு.

"அழத்தான் அழுவேன்" என்று சொல்வானா என்ன பாலு?

"ஊஹூம், அன்று நான் விளையாட்டுக்காக அழுததை நீ நிஜமென்றே நினைத்துக்கொண்டாயா?" என்று ஒரு போடு போட்டான் பாலு.

தலைதீபாவளி விளையாட்டு ஆரம்பமாயிற்று. மாப்பிள்ளையும் பெண்ணும் நீலுவின் கையிலிருந்து பாலுவின் கைக்கு மாறின. மாறியதுதான் தாமதம்! நீலுவின் பொம்மையை வீசி எறிந்துவிட்டுத் தன் பொம்மையை மட்டும் எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்துவிட்டான் பாலு.

'நல்ல வேளை! நம்மைப்போல் செய்யாமல் அவனுடைய பொம்மையை மட்டும் எடுத்துக் கொண்டு ஓடினனே' என்று சந்தோஷமடைந்தாள் நீலு.

பிரசங்கம்

1. நீ பேச விரும்புவதை எழுதிக்கொள்ளாதே.

2. பேசப் போவதை வார்த்தைக்கு வார்த்தை உருப்போட்டு வைத்துக்கொள்ளாதே.

3. நடந்த சில சம்பவங்களும் உதாரணங்களும் உன் பிரசங்கத்தில் நிரம்பியிருக்க வேண்டும்.

4. பேச விரும்பும் விஷயத்தைப்பற்றி நாற்பது மடங்காவது நீ தெரிந்துகொள்ள வேண்டும்.

5. நண்பர்களுடன் பேசும்போது நீ சொல்லப்போவதைப் பேசிப் பார்த்துக்கொள்.

6. பேசப் போவது கஷ்டமாய் இருக்கும் என்று நீ எதனுல் நினைக்கிருயோ அதன் காரணங்களை ஆராய்ந்து கொள்.

—டேல் கார்னிஜி.

ஸீஸன் துணுக்குகள்

டி. வி. ரங்கசாமி

விநாயகர் (பார்வதியிடம்):—அம்மா! இன்றைத் தினம் நூறு தடவை நாக்கைக் கடித்துக் கொண்டிருப்பேன். யார் என்னைப்பற்றி நினைக்கிறார்களோ தெரியவில்லையே?

பார்வதி:—உன்னை வேறு யார்தான் நினைப்பார்கள்? பூலோகத்தில் பரீக்ஷையில் தேருதவர்கள்தான் நினைத்திருப்பார்கள்!

★ ★ ★

வந்தவர்:—பரீக்ஷையில் பாஸ் செய்யாத பிள்ளைகள் என்ன பிள்ளைகள் ஸார்! முதல் வருஷத்திலேயே பாஸ் செய்கிற பிள்ளைகள் தான் நல்ல சத்தான பிள்ளைகள். மக்குகள் ஏன் பாஸாகிறது?

மற்றவர்:—அப்படியானால் உங்கள் பையன் இந்த வருஷம் முதலிலேயே பாஸ் செய்துவிட்டான்போலிருக்கே!

வந்தவர்:—அது எப்படி ஸார் உங்களுக்குத் தெரியும்?

★ ★ ★

ஜோஸ்யர் (பையனிடம்):—தம்பி! உனக்கு ஆனி மாசம் ஒரு பெரிய கண்டம் இருக்கு!

பையன்:—நீங்க சொல்றது வாஸ்தவம் தான். ஆனி மாசத்தில்தான் என் பரீக்ஷை ரிஸல்ட் வெளியிடுகிறார்கள்.

★ ★ ★

முதல் பையன்:—டேய்! நம்ப சுந்து பரீக்ஷையில் பாஸ் செய்தும் நல்ல தெம்பாக நடக்கவில்லைடா. காரணம் தெரியுமா?

இரண்டாவது பையன்:—அவன் படிச்சுப் பாஸ் பண்ணினல்தானே நடையில் தெம்பு இருக்கும்?

★ ★ ★

ஒருவர்:—ஏன் ஸார்! உங்க பையன் பாஸ் பண்ணிவிட்டானுமே. மேலே என்னச் செய்யப் போகிருனும்?

மற்றவர்:—'கி ரா ப்' வைத்துக்கொள்ளப் போகிருனும்.

ராமு:—டேய் கோபு! இதுதானடா ஆப்த சிநேகத்துக்கு அடையாளம்?

கோபு:—என்னடா ராமு?

ராமு:—என்னை விட்டுவிட்டு நீ மட்டும் பாஸ் பண்ணலாமாடா?

★ ★ ★

மனைவி:—இந்த வருஷம் நம்ப பையனுக்குப் பரீக்ஷையில் பாஸாகாவிட்டால், எங்கேயாவது குளத்திலோ குட்டையிலோ விழுந்து விடுவானும்.

கணவன்:—அதைப்பற்றிப் பயப்படாதேடி! இந்த வருஷம் எந்தக் குளத்திலும் குட்டையிலும் தண்ணீரையே காணோம்.

★ ★ ★

டியூஷன் வாத்தியார் மனைவி:—நம்ப கிட்ட டியூஷன் சொல்லிக் கொண்ட பையன்களின் நம்பரெல்லாம் பேபரில் வந்திருக்கா?

டியூஷன் வாத்தியார்:—நம்ப பையன்களின் நம்பர்களை மட்டும் அச்சடிக்க மறந்துவிட்டார்கள் போலிருக்கு!

★ ★ ★

ரெயில்வே கார்டு (டிரைவரிடம்):—டிரைவர்! நீங்கள் இன்னும் இரண்டு மூன்று நாளைக்கு ரெயிலை மெதுவாக ஓட்டணும்.

டிரைவர்:—ஏன் ஸார்?

ரெ. கார்டு:—இன்னிக்குப் பேபரிலே பரீக்ஷை ரிஸல்ட்களெல்லாம் வந்திருக்கு!

★ ★ ★

முதல் ஸ்திரீ:—ஏன் மாமி! உங்க பையன் பாஸாகிவிட்டானுமே. அவனுக்கு என்ன விருந்து பண்ணினீர்கள்?

இரண்டாவது ஸ்திரீ:—நல்ல கிச்சிலிச்சம்பா அரிசிச் சாதம் பண்ணினேன்.

★ ★ ★

பக்கத்து வீட்டுக்காரர்:—ஸார்! இந்த வருஷம் எங்க பையன் பரீக்ஷையில் புஸ்......உங்க பையன்?

நண்பர்:—டப்!



கர்நாடகப் பாட்டி

என் பாட்டிக்கு என் தந்தை பணம் அனுப்பியிருந்தார். அதைப் பெற்றுக்கொண்டு பாட்டி எழுதியிருந்த பதில் இது:

"நீ அனுப்பியிருந்த பணத்தை வாங்கிண்டேன். நீ அனுப்பிச்ச ரூபா நோட்டு ரொம்பப் பழசா இருக்கு. இனிமேல் நல்ல நோட்டா அனுப்பு. பழைய நோட்டை அனுப்பாதேடாப்பா. நான் சௌக்கியம். பாலு நன்னு படிக்கிறுனு? மறக்காமல் பதில் போடு.''

—V. R. பாலசுப்பிரமணியன், குடியாத்தம்.

* * *

எது வழி?

ஓர் ஊரில் எட்டுப் பேர் இருக்கிருர்கள். எட்டுக் கோயில்கள் இருக்கின்றன. 1 என்பவன் 1 ஆம் நம்பர் கோயிலுக்குப் போகிறன். இப்படியே எட்டுப் பேரும் எட்டுக் கோயில்களுக்குப் போகிருர்கள். கடைசியில் பார்த்தபோது ஒருவன் போன வழியில் மற்றவன் குறுக்காகவோ நெடுக்காகவோ போகவில்லை. அப்படியானல் அவர்கள் எந்த வழியாகப் போயிருப்பார்கள்? தெரியாவிட்டால் எதிர்ப் பக்கத்தைப் பாருங்கள்.



—V. சௌந்தரராஜன் (S. 480), மயிலாப்பூர்.

பாட்டு

பள்ளி சென்று பாலர் நாமே
பயில வேண்டுமே—கல்வி
பயில வேண்டுமே.
துள்ளித் தினம் மாலை நேரம்
ஆட வேண்டுமே—கூடி
ஆட வேண்டுமே.
ஏழை வாடக் கண்டு விடில்
இரங்க வேண்டுமே—மனம்
இரங்க வேண்டுமே.
கூழையாகின் கொடுத்து நாமே
உதவ வேண்டுமே—சிறிது
உதவ வேண்டுமே
காந்தி, ஏசு, புத்தர் வழி
காக்க வேண்டுமே—நாட்டைக்
காக்க வேண்டுமே.
சாந்தி ஒன்றே ஏற்ற தெனச்
சாற்ற வேண்டுமே—சுற்றிச்
சாற்ற வேண்டுமே. —இ. சொர்ணவேலு.

* * *

விடுகதை

ராஜா மகள் சீராடிப் போகிருள், அழைக்க நேரமில்லை.
மல்லிகைப் பூ பூத்துக் கிடக்கிறது, தொடுக்க நேரமில்லை.
தங்கப்பட்டை கிழிந்து கிடக்கிறது, தைக்க நேரமில்லை.

விடை: மேகம், நட்சத்திரம், நிலா.

—K. J. V. (விடுகதைப் புதையல்.)

* * *

விடை: எது வழி



கேட்டீர்களா!

சோமநாதர் ஆலயம்

கஜினி முகம்மது இடித்துப் பாழாக்கிச் சென்ற சோமநாத புரத்து ஆலயத்தை மீண்டும் புதிதாக்கிக் கட்ட இந்திய சர்க்காரே முன்வந்திருக்கிறார்கள். இந்த முயற்சிக்குக் காரணமாக இருந்தவர் சர்தார் பட்டேல். மே மாதம் 11-ஆம் தேதி ஜனாதிபதி ராஜன்பாபு முன்னிலையில் ஜோதிர் லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தார்கள்.

கோட்டை ஸ்டேஷனுக்கருகில் மேல் பாலம்

சென்னை கோட்டை (Fort) ஸ்டேஷன் லெவல்கிராஸிங் கேட்டுக்கு மேல்பாலம் போடுவதுபற்றி யோசிக்கப்படுகிறது. ரெயில்வே, கார்ப்பரேஷன், ரிஸர்வ் பாங்க் ஆகிய மூன்று நிர்வாகத்தினரும் இதற்காகும் செலவைப் பகிர்ந்துகொள்வார்களாம்.

இமயம் ஏறும் பிரெஞ்சுக் கோஷ்டி

இமய மலையில் ஏறுவதற்காக, பிரான்ஸ் தேசத்திலிருந்து எட்டுப் பேர் கொண்ட கோஷ்டி ஒன்று இந்தியாவுக்கு வந்திருக்கிறது. நந்தாதேவி சிகரம்வரை ஏறுவதுதான் இவர்கள் நோக்கம். சுமார் மூன்று மாதங்கள் இவர்கள் மலையில் தங்குவார்களாம்.

கிருபளானி ராஜீநாமா

சமீபத்தில் சென்னை ராஜ்யத்துக்கு வந்திருந்த ஆசாரிய கிருபளானி ராஷ்டிரபதியிடம் அபிப்பிராய பேதம் காரணமாகக் காங்கிரஸிலிருந்து விலகிவிட்டார். இவர் காந்திஜியின் அன்புக்குப் பாத்திரமானவர். காங்கிரஸில் வெகுநாள் பொதுக் காரியதரிசியாகவும், நடுவில் ராஷ்டிரபதியாகவும் இருந்தவர்.

புதிய கல்லூரிகள்

ஒரு புது என்ஜினீரிங் கல்லூரி உள்பட ஏழு புதிய கல்லூரிகளை இந்த வருஷம் ஆரம்பிக்கப்போகிறார்கள். இவற்றில் ஒன்று பெண்கள் கல்லூரி. புதிய கல்லூரிகள் சென்னை, திருச்சி (இரண்டு), சிவகங்கை, திருப்பத்தூர் (வ. ஆ.), தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்படும். கோயம்புத்தூர் பீளமேட்டில் என்ஜினீரிங் கல்லூரி ஒன்றைத் தனிப்பட்டவர்கள் ஆரம்பித்து நடத்த முன்வந்திருக்கிறார்கள்.

சபரிமலை ஐயப்பன்

மேற்குத்தொடர்ச்சி மலையில் திருவாங்கூர்ப் பக்கமுள்ள ரிஸர்வ் காட்டுப் பிரதேசத்தில்தான் சபரிமலை இருக்கிறது. இந்த மலைமீது தர்மசாஸ்தா (ஐயப்பன்) விக்கிரகத்தைப் புதிதாகக் கட்டப்பட்ட ஆலயத்தில் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள்.

2/1780
சென்னை-600 008

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

மே மாதம் ஏற்பட்ட கிளைக் கழகங்கள்.

(1) மதுரை
- உபதலைவர்: ஆர் வரதாச்சாரி.
- செயலாளர்: ந. ரங்ககிருஷ்ணன் (K. 244).
- பொருளாளர்: எஸ். எஸ். சேஷாத்திரி.

ஒரு செயற்குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

(2) திருச்சி
- உபதலைவர்: T. K. ராமசந்திரன் (R. 108).
- செயலாளர்: T. K. ஜயரங்கன் (J. 156).
- பொருளாளர்: K. சங்கரநாராயணன் (S 895).

இருபத்தைந்து அங்கத்தினர்கள் கொண்ட ஒரு செயற்குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

(3) ஏர்வாடி
- உபதலைவர்: O.M. இபுராகிம் (I. 10).
- செயலாளர்: M. P. அகமதுமொகைதீன் (A. 70).
- பொருளாளர்: M. A. கபூர்.

செயற்குழு அடுத்து அமைக்கப்படும்.

(4) குடியாத்தம்
- உபதலைவர்கள்: V. R. பாலசுப்பிரமணியன், T. S. ஜயராமன் (J. 429).
- செயலாளர்: R. கல்யாணராமன் (K. 1).
- பொருளாளர்: R, மணியன்.
- வாசகசாலை நிர்வாகி: D. ஜயராமன்.

செயற்குழு அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

(5) தஞ்சாவூர்
- உபதலைவர்: M. S. ஸ்ரீநிவாஸன் (S. 870).
- செயலாளர்: L. கிருஷ்ணமூர்த்தி (K. 71).
- பொருளாளர்: S ஸ்ரீநிவாஸன் (S. 784).

ஒரு செயற்குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

(6) குருநாகல், இலங்கை
- உபதலைவர்: கண. வள்ளியப்பா.
- செயலாளர்: கண. சுந்தரம்.
- பொருளாளர்: மீ. பரூக்.
- வாசகசாலை நிர்வாகி: எம். இஸ்மெயில்.

17 அங்கத்தினர்கள் செயற்குழுவில் இருக்கிறார்கள்.

(7) யாழ்ப்பாணம்
- உபதலைவர்: ச. செல்வராசா (S. 559).
- செயலாளர்: ச. பரமேஸ்வரன் (P. 98).
- பொருளாளர்: மு. ஆலாலசுந்தரம்.

12 பேர் கொண்ட செயற்குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

திருவள்ளூரில் உள்ள கண்ணன் கழக அங்கத்தினர்கள் தேர்தல் நடப்பதற்காகத் தங்கள் விலாசத்தை S. R ராஜு, 43, மோதிலால் தெரு, திருவள்ளூர் என்ற விலாசத்துக்கு எழுதவேண்டும்.

பெரம்பூரில் உள்ளவர்கள் தேர்தல் நடப்பதற்காகத் தங்கள் விலாசத்தை A நாகேஸ்வரராவ் (N. 11), 43, வாட்கின்ஸ் தெரு, பெரம்பூர், சென்னை 11 என்ற விலாசத்துக்கு எழுதவேண்டும்.

குறிப்பு: மேலே கண்ட ஊர்களில் உள்ள கண்ணன் கழக அங்கத்தினர்கள் தங்கள் பெயரைச் செயலாளரிடம் பதிவு செய்துகொள்ளவேண்டும்.

Reg. No. M. 5542

இரண்டு புதுப் புத்தகங்கள்!

1 கழுகும் கிளியும்

கழுகும் கிளியும் என்றுதான் இந்தப் புத்தகத்துக்குப் பெயர். . னல் இது இந்தப் புத்தகத்தின் ஒரு கதைக்குத்தான் பயர். தந்திரக்காரக் கொக்கு, கொலைகார நண்டு, அசட்டுக் கழுதை, குறும்புக்காரக் குரங்கு, அப்பாவிக் கழுகு, ருத்திராக்ஷப் பூனை முதலிய பல வேடிக்கையான கதைகளை இந்தப் புத்தகத்தில் காணலா

பார்த்தால் உங்களுக்குச் சிரிப்புச் சிரிப்ப ரு பல ங்கள் இந்தப் புத்தகத்தில் இருக்கின்றன.

விலை 8 அணா

2. என் பேர் என்ன?

ஈக்குத் தன் பெயர் மறந்துவிட்டது. எங்கெல்லாமோ அலைந்து திரிந்து, யாரையெல்லாமோ கேட்டுக் கடைசியில் அது தன் பெயரைத் தெரிந்துகொண்டது. யாரையெல்லாம் கேட்டது, கடைசியில் யார் சொன்னார்கள்? தையைப் படியுங்கள். பாட்டும் கதையும் படமும் நிறைந்த புத்தகம்.

விலை 3 அணா

அடுத்த வெளியீடுகள்:

தங்கத்தின் பந்து **தவளையும் காளையு**

நீங்கள் கண்ணன் கழக மெம்பரா? அப்படியானால் உங்களுக்குக் கமிஷன் உண்டு!

கண்ணன் காரியாலயம்

மயிலாப்பூர் :: சென்னை - 4.